
# சந்நிதி

பல்சமய காலாண்டிதழ்

ஜூன், 1998




திருகோணமலை பத்திரகாளி
அம்மன் கோயில் சிறப்பிதழ்

சிவகாமி அம்மாள்
பப்ளிகேஷன்ஸ்

Shrine
சந்நிதி
பல்சமய காலாண்டிதழ்
மலர் 1 இதழ் 3
ஏப்ரல் - ஜூன் 1998

ஆசிரியர்
வே. வரதசுந்தரம்



வெளியீட்டாளர்கள்
சிவகாமி
அம்மாள்
பப்ளிகேஷன்ஸ்

39, 36 ஆவது ஒழுங்கை
கொழும்பு-6
இலங்கை
தொலைபேசி: 596253

# கையறு நிலையிலும் கலங்கமாட்டோம்

"சந்நிதி" புத்தாண்டிதழ் திருகோணமலை பத்திரகாளி அம்மன் கோயில் உற்சவ மலராக விரிந்துள்ளது. சிவகாமி அம்மாள் பப்ளிகேஷன்ஸ் வெளியிடும் சஞ்சிகை சந்நிதி.

வாழ்நாள் முழுதும் பத்திரகாளி அம்பாளின் அன்புக்குப் பாத்திரராகும் வண்ணம் தவவாழ்வு வாழ்ந்தவர் தவப்பிராட்டி சிவகாமி அம்மாள். அப்பெருமாட்டியின் நினைவாக இவ்விதழை பத்திரகாளி அம்பாளின் திருப்பாதங்களில் காணிக்கையாகப் படைக்கிறோம்.

இறை நாமத்தை உச்சரிக்கும் உதடுகளிலும் பார்க்க மக்கள் சேவை ஆற்றும் கரங்களை நான் கூடுதலாக நேசிக்கிறேன்.

ஒரு புன்முறுவல், ஆறுதல் மொழி, கண் பார்வை இல்லாத முதியவருக்கு பத்திரிகை வாசித்தல், நோயாளர்களைச் சுகம் விசாரித்தல் அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்தல் இப்படி சேவை செய்யுங்கள்.

ஆனந்தமான குடும்பம், தெய்வீகக் குடும்பம் மலர வேண்டுமானால் பகிர்ந்து கொள்ளப் பழகுங்கள்.

இறைவன் ஒரு மலர். அதன் நறுந்தேனினை நுகரும் வண்டு நீங்கள்.

இறைவன் கொழுகொம்பு. அதில் படரும் மென்கொடி நீங்கள்.

இறைவன் விரிந்து செல்லும் வானம். அங்கே கண்சிமிட்டும் நட்சத்திரம் நீங்கள்.

இப்படி இறைவனிடத்து உங்கள் அன்பை வளருங்கள். உங்கள் இலட்சியம் கைகூடும்.

இது பகவான் சத்திய சாயிபாபாவின் உறுதியுரை.

இத்தகு பக்தி நிலையில், எமது துன்பங்கள், வேதனைகள் சோதனைகள், நோய்பிணி எம்மைப் பாதிக்கமாட்டா. சொல்லொணாத் துயரங்கள் மத்தியிலும் மனவுறுதி பிறக்கும். கையறு நிலையிலும் நாம் கலங்க மாட்டோம். இறைவனே நல்ல கதி.

திருநாவுக்கரசு நாயனாரைச் சமணர்கள் சுண்ணாம்புக் காளைவாயில் போட்டுப் பூட்டியபோது இறைவனைப் பாடிப் பரவ அந்தத் துன்பம் அவருக்கு இனிமை பயத்தது.

அந்த இன்பம் ஐம்புலன்களுக்கும் குளிர்ச்சி தந்தது. மாசில் வீணை காதுக்கும், மாலைமதியம் கண்ணுக்கும், வீசுதென்றல் மூக்குக்கும், வீங்கிளவேனில் உடலுக்கும் வண்டறைப் பொய்கையின் நீர் நாவுக்கும் குளிர்ச்சி பயத்தன.

இத்தகு இன்பத்தை, இனிமையை ஈசன் திருவடிகள் கொடுத்தன என்கிறார் நாவுக்கரசப் பெருமான்,

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

# அம்மையின் அருள்

சுவாமி கெங்காதரானந்தா



பக்தர்கள் மிகவும் உரிமை பாராட்டி காளி ஆச்சி என்று அழைத்து வரும் திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயம் பிரத்தியட்ச காளி பீடங்களில் முதன்மை வாய்ந்தது.

ஆலயமும் ஆலய கைங்கரியங்களும் எவ்விதம் நிர்வாகம் செய்யப்படவேண்டும் என்பதற்கு இவ்வாலய நடைமுறைகள் வழிகாட்டியாக இருக்கின்றன. நித்திய நைமித்திய பூஜைகள் விசேட காலங்களில் நடைபெறும் உற்சவங்கள் - அருள் சுரக்கும். லட்சார்ச்சனைகள் ஆலயம் க்ஷீணதசையடையாமல் காலாகாலத்தில் செய்யப்பட்டு வரும் ஜீர்ணோத்தாரண திருப்பணிகளும், கும்பாபிஷேகம் முதலிய விசேஷ கிரியைகளும் ஆலய கைங்காரியங்களும் முறை தவறாமல் நடைபெற்று வருகின்றன. இது ஆலய பக்தர்களுக்கு மாத்திரமல்ல ஹிந்துமத தர்மங்களுக்கே பேரும் புகழும் தரக் கூடியது. காளி ஆச்சியென்றால் ஆஸ்திகர்களுக்கு மாத்திரமல்ல நாஸ்திகர்களுக்கும் உள்ளூரப் பயமும் பக்தியும் வரும்.

பல்லாண்டுகளாக திருகோணமலை மக்களுக்கு பல கால கட்டங்களில் நிகழ்ந்த பேராபத்துக்களில் இருந்தெல்லாம் பாதுகாத்து வளர்த்தெடுத்த தாயிலும் சாலச் சிறந்த நமது பத்திரகாளி அம்மையின் அருள் மேலும் மேலும் எம்மைக் கண்ணை இமை காப்பது போல் நின்று அனைவரையும் பாதுகாத்து புருஷார்த்த தர்மங்களை அளித்து வாழ வைப்பதாக

## அருள் மழை பொழிகிறாள்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

தேவியின் மூர்த்த பேதங்கள் அநந்தம்.

தேவாரம் பெற்ற மகிமை வாய்ந்த திருத்தலமாகிய திருகோணமலையில் பத்திரகாளியாய் அருள்மழை பொழிந் தருளுகின்றாள்.

நாமெல்லாம் தேவியின் அருள் மழையில் முழுகு தற்கும், பாத்திரராகும் பொருட்டும் தவம் செய்வோமாக!

பத்திரகாளி அம்மையின் பாத கமலங்களுக்கு வணக்கம்!

## வருக!

"தாமரைத்தீவான்"

1. தாண்டினேன் பலவும் பத்தும் !
 'சந்நிதி' தனையும் கண்டேன்!
 தீண்டினேன் கண்களாலே
 தெரிந்ததே உள்ளதெல்லாம்!
 வேண்டினேன் மீண்டும் கண்ணில்
 வெளிப்பட வேண்டும் என்றே!
 தூண்டியதாலே உள்ளம்
 தொழிற்படுகின்றேன் இன்றே!

2. முழுவதும் 'பக்தி' வெள்ளம்!
 மூத்தவர் அறிவின் ஆக்கம்!
 விழுபவர் எழுந்து போகும்
 அழுதிருப் போரைத் தேற்றும்
 ஆனந்தக் கலசப் புற்கை!
 பழுதிலை -'வருக' என்றே
 பாவலன் வாழ்த்துகின்றேன்!

# சகல செளபாக்கியங்களையும் பெறுக



ஸ்ரீலஸ்ரீ சோ.ரவிச்சந்திரக்குருக்கள்
கோயில் அறங்காவலர்

சந்நிதி புத்தாண்டு மலர் பத்திரகாளி அம்பாள் உற்சவகாலச் சிறப்பிதழாக மலர்வது கண்டு சந்தோஷம்.

சிவகாமி அம்மாள் பிரசுராலய வெளியீடு " சந்நிதி" திருமதி சிவகாமி அம்மாள் திருக்கோணமலை பத்திரகாளி அம்பாளின் அடியவர்.

எனது தந்தையார் காலந்தொட்டு அம்பாள் ஆலயத்துடன் நல்ல ஈடுபாடும், எமது குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பும் கொண்டவர்.

சிவகாமி அம்மாவின் நினைவில் வெளிவரும் "சந்நிதி" அம்பாள், புகழ் பாடுவது மிகப் பொருத்தம்.

உலக மக்கள் சகல செளபாக்கியங்களையும் அம்பாளின் கடாட்சத்தையும் பெற்று இனிது வாழ்க.

# அம்மை நேர்படுவாள் தோளினிலே!



எங்கெங்கு காணினும் சக்தியடா ! - தம்பி
எழுகடல் அவள் வண்ணமடா ! - அங்கு
தங்கும் வெளியினிற் கோடியண்டம் - அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா ! - ஒரு
கங்குலில் ஏழு முகிலினமும் - வந்து
கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ? - எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம் - அவள்
மந்த நகையங்கு மின்னுதடா !

காளை ஒருவன் கவிச்சுவையைக் - கரை
காண நினைத்த முழுநினைப்பில் - அன்னை
தோளசைத்தங்கு நடம்புரிவாள் - அவன்
தொல்லறிவாளர் திறம்பெறுவான் - ஒரு
வாளைச் சுழற்றும் விசையினிலே - இந்த
வைய முழுதும் துண்டு செய்வேன் - என
நீள இடையின்றி நீநினைத்தால் - அம்மை
நேர்படுவாள் உன்றன் தோளினிலே !

-பாரதிதாசன்-

# வேண்டுகோள்

பேரன்புக்குரிய வாசகர்களே,

பல்சமயக் கருத்துக்களை ஏந்திவரும் பேழையாக ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழி இதழ்கள் உருவாக வேண்டும் என்ற நெடுநாளைய எண்ணம் இறையருளாற் கைகூடியுள்ளது. இவ்விதழ் காலாண்டிதழாக தற்போது வெளிவந்துள்ளது.

இவ்விதழ் தொடர்ச்சியாக மலர்ந்து பல்சமய ஆன்மீக நறுமணம் பரப்பி நீடித்த பயன் தரச் சந்தா செலுத்தி ஊட்டமளிக்குமாறு கோருகின்றோம்.

**காலாண்டுச் சந்தா:**

**இலங்கை ரூ 30/= வெளிநாடு £ 1.00 (தபாற் செலவு உட்பட)**

**ஆண்டுச் சந்தா**

**இலங்கை ரூ.120/= வெளிநாடு £ 4.00 (தபாற் செலவு உட்பட)**

காசோலை, காசுக்கட்டளை "Sivagami Ammal Publications" என்ற பெயருக்கு எழுதப்பட வேண்டும். கீழ்வரும் படிவத்தை நிரப்பி காசோலை/காசுக்கட்டளையை இணைத்து எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இவ்வண்ணம்
வே.வரதசுந்தரம்
ஆசிரியர்

## சந்தா விண்ணப்பம்

ஆசிரியர்,
சந்நிதி,
39/36, வது ஒழுங்கை, கொழும்பு 06, இலங்கை.

நான் சந்நிதி காலாண்டிதழுக்கு காலாண்டு/ஆண்டு சந்தா செலுத்த விரும்பி இத்துடன் ரூபா...............................க்கான காசோலை/காசுக்கட்டளை அனுப்புகிறேன்.

*அனுப்பவேண்டிய முகவரி:*

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

| காசோலை<br>காசுக்கட்டளை இல. | வங்கி/தபால் நிலையம் | திகதி |
|---|---|---|
| | | |

..............................................

*கையொப்பம்*

## இறைவா! நீ எங்கும் நிறைந்துள்ளாய்!

நிலம், நீர், தீ, காற்று ஆகாயம் என்பன ஐம்பூதங்கள்.

சுவை ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன ஐங்குணங்கள்.

நிலம் இந்த ஐந்து குணங்களையும் உடையது. அதனால் நிலமாகிய பூமியின் அசைவும் நிலையும் ஒரு வரையறைக்கு உட்பட்டவை.

குணங்களின் எண்ணிக்கை குறையக் குறைய பூதங்களின் அசைவும் நிலையும் வரையறைகளிலிருந்து விடுபடுகின்றன.

ஆகாயம், ஓசை என்னும் ஓரே ஒரு குணம் மட்டும் கொண்டது. அதனால் அது எங்குமுளளது.

இறைவன் குணம் இல்லாதவன். நிர்க்குணன்.

இதனால் இறைவன் எங்கும் வியாபகமாயுள்ளான்.

அவன் சர்வவியாபகி

இறைவன் எங்கும் நிறைந்துள்ளான்.

இப்பேருண்மையை மிக இலகுவாக விளக்குகிறார் பகவான் ஸ்ரீ சத்தியசாயி.



செ.நடேசபிள்ளை

# குருபக்தி



வாழ்க்கையின் தொடக்கம் பிறப்பு. வாழ்க்கையின் முடிவு மரணம். இவை இரண்டிற்கும் இடையில் மனித ஜீவிதம் ஓர் அமர்க்களம். அப்போராட்டத்தின் மத்தியில் நின்று வாழ்க்கையை வளமுள்ள தோட்டமாக மாற்றி அமைக்க உதவுவது குருபக்தி உதவுபவர் குரு.

*எந்தவித ஆரவாரமின்றி அமைதியாக தான் வந்ததை உணர்த்தாது உயிர்களை உய்விக்க வரும் வசந்தகாலத்தை போன்றவர் குரு. அவரை குரு பக்தியால் நமஸ்கரித்து வணங்க வேண்டும்.*

குரு பத்தியில் வாழ்க்கையின் பயனை குறைவின்றி அடையலாம். குரு பக்தி உள்ளவனுக்கு சாஸ்திரங்களைப் படிக்காமலே ஞானம் சித்திக்கும் ஜபம் தவம் விரதம் தீர்த்தம் யாகம் தானம் ஆகிய அனைத்தும் குரு தத்துவத்தை அறிந்த பின்பே பயனளிக்கும் என்று குருவைப் பற்றியும் 'குருபக்தியைப்' பற்றியும் கூறும் குருகீதை என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாந்தோக்கிய உபநிஷதத்தில் ஸத்யகாமன் என்னும் சீடன் குருவை அடைந்து உபநயனம் பெற்று குருவின் கட்டளைப்படி ஆச்சிரமத்தில் உள்ள மாடுகளை மேய்த்து பராமரித்து வந்தான். நானூறு பசுக்கள் ஆயிரமாக வளரும் வரை மேய்த்தான். உடலை வருத்தி செய்யும் குருசேவை ஞானோதயத்திற்குச் சாதனமாகும் என்பதும் மனம் சேவையால் பக்குவமடைந்த போது வானும் மண்ணும் மலையும் நதியும் ஒவ்வொன்றும் குருவாக நின்று பேசாமல் பேசி அவனுக்கு ஞானத்தை புகட்டியது என்பதும் வரலாறு.

நமது வாழ்க்கையில் நல்லது கெட்டது சுகம் துக்கம் போன்ற சர்வ சாதாரண வாழ்க்கைச் சம்பவங்களை வைத்து கவர்ச்சியுடையதாக்கி சம்பவங்களின் சத்தியங்களை சத்திய உண்மைகளை பிரத்தியக்ஷடமாக காட்டிக் கொண்டிருப்பவரே 'குரு' என்று சுவாமிஜி கெங்காதாரனந்தா அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இத்தகைய குருவை நமது புண்ணியபலன் காரணமாகவும் பிராப்தநியதியின் காரணமாகவும் அடையும் போது அவர் அருளாக எமது வாழ்வு வளமுள்ள தோட்டமாக மாற்றி அமைக்கப்படுகிறது.

அஞ்ஞானம் அல்லது சூனிய உணர்வு என்று சொல்லப்படுகின்ற இருளினால் மூடிய கண் ஞானம் என்னும் மை தீட்டிய கருவியினால் எவரால் திறக்கப்படுமோ அப்படிப்பட்ட எங்கள் கெங்காதரானந்த குருவாகிய உங்களுக்கு நமஸ்காரம்.

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் உலகத்தில் எப்போதும் நிலை கொண்டிருக்கின்ற சூனிய உணர்வு அல்லது அஞ்ஞான உணர்வுடன் ஓயாமல் போராடிக் கொண்டு இருக்கின்றான். இவ்வுணர்வின் ஆதிக்கத்தினால் எடுத்த கருமத்தை வெற்றியாக முடிக்கத் தெரிவதில்லை. ஒரு காரியத்தை செய்யும் போது வெற்றி வருமா? வராதா? இது நடக்குமா?நடக்காதா? கிடைக்குமா? கிடைக்காதா? என்றும் ஒரு ஓயாத போராட்டம் இப்போராட்டத்தினால் அஞ்ஞான் உணர்வினால் மனித மனமானது கர்ம பலனைப் பற்றி எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணிக் கொண்டிருக்கும் இதுவே, இம்மனோவாசனையே ப்ரதிகரணம் எனப்படும். இது அதிக துன்பத்தை விளைவிக்கக்கூடியது. பிரச்சனைக்குரிய காரண காரியங்களும் தீர்ப்பதற்குரிய கர்மத்திறமையும் தெளிவாகப் புரிவதில்லை. அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் நிலையற்ற அற்ப சுகங்களில் மயங்கிக் கைகெட்டியது வாய்க்



ச. ஜெயமயூரகன்

கெட்டாமலும். வாய்க் கெட்டியதை உட்செலுத்த முடியாமலும் வேதனைப்படும்

பாரிசவாத நோயாளியின் நிலையே. இத்தகைய சூனிய அல்லது அஞ்ஞான உணர்வுடன் இணைந்த மனித மனத்தின் நிலை, மாறவேண்டும். இந்நிலையை மாற்ற உதவுபவர் 'குரு' மாற்ற உதவுவது 'குருபக்தி'.

இயற்கை காலங்களில் பிரகாசம் பொருந்தியது மகிழ்ச்சியை கொடுப்பது உலகை உயிர்பிப்பது வசந்தகாலம். உலகில் உள்ள உயிரினங்கள் யாவும் மழையினால், பனியினால், குளிரினால், வெப்பத்தினால் நடுநடுங்கி மயங்கி நொந்து தளர்ந்து போய்க் கொண்டிருக்கும். எப்போது வசந்தம் வரும் என்று ஏங்கி ஏங்கிக் கொண்டிருக்கும். திடீர் என்று ஒரு நாள் உதிர்ந்த இலைகள் துளிர்விடும். தளர்ந்த உயிர்கள் நிலைபெறும். பூக்கள் பூத்து தம் மகிழ்ச்சியை தெரிவிக்கும். எங்கும் மகிழ்ச்சி எதிலும் உயர்ச்சி ஆம்! எதிர்ப்பார்த்த வசந்த காலம் வந்துவிட்டது.

வசந்தகாலம் தான் வருகிறேன் வரப்போகிறேன் என்று சொல்லிவிட்டு வருவதில்லை. அது வந்ததை நாம் உயிரினங்கள் மூலம் உலகின் மகிழ்ச்சி நிலை மூலம் உணர்கிறோம். வசந்தகாலம் போன்றவரே குருநாதர். அவரும் தான் குருவாக வருகிறேன் என்று சொல்லிவிட்டு வருவதில்லை. ஜீவனின் பூர்வ புண்ணிய பலனாக பிராப்த நியதியின் காரணமாக மேலான இருதயம் தூய்மை அடையும் பொழுது அந்த ஜீவனை குரு தானே தேடி வருவார் இதனையே தாரமும் குருவும் தலைவிதிப்படி என்ற பழமொழி வழியுறுத்துகிறது.

எந்தவித ஆரவாரமின்றி அமைதியாக தான் வந்ததை உணர்த்தாது உயிர்களை உய்விக்க வரும் வசந்தகாலத்தை போன்றவர் குரு. அவரை குரு பக்தியால் நமஸ்கரித்து வணங்க வேண்டும்.

துன்பத்திற்கு காரணம் அஞ்ஞானம் இன்பத்திற்கு காரணம் ஞானம். அஞ்ஞானம் இருக்க இருக்க துன்பம் இருக்கும். இத்துன்பம் நீங்க குருவிடமிருந்து அஞ்ஞான நிவர்த்தியை ஞானத்தை பெறவேண்டும்.

'கு' என்னும் எழுத்து இருளைக் குறிக்கும் அஞ்ஞானத்தைக் குறிக்கும் 'ரு' என்னும் எழுத்து ஒளியைக் குறிக்கும் ஞானத்தைக் குறிக்கும் நிவர்த்தியைக் குறிக்கும். இத்தகைய அஞ்ஞானத்தை அல்லது சூனிய உணர்வை அகற்றி ஞானத்தை அதாவது அன்றாட வாழ்வில் நடைபெறும் வாழ்க் ணு சம்பவங்களில் உண்மையை நோக்கத்தை எடுத்துக் கூறி உள்ளத்தில் பதியவைத்து ஞானத்தைக் கொடுப்பவர் குரு.

# அம்மன் பாடல்

சக்திவடி வேலனுக் கன்புசெய்து சூர்மாத்
  தடியவோர் வேல்கொடுத்தாய்
பசுதரவர் பவவினை களைந்தெறிய ஞானமாம்
  நின்னருட் பால்கொ டுத்தாய்
மிக்கபுகழ் வித்தகி நீயென்று போற்றிய
  பேர்க்கெலாம் நல்வாழ் வளித்தாய்
பக்குவமாம் ஞானமெய்ச் சுடரே போற்றினேன்
  காத்தருளும் ஆதிபத்ர காளியே.

மூத்தமக னென்றுன் மதலையைப்
  பிள்ளையை யானைமுகக் கடவுளை
சேர்த்தணைத்து உச்சி மோந்துன்
  மடிதனில் சேர்த்தவளே எந்தன்
ஆத்தாளே அம்மே அன்னையே
  அடிபணிந் துன்பாதம் உளத்தே
சேர்த்தாலும் ஏற்க மறுப்பையோ
  கருணையே வடிவான தாயே.

நின்பாத பங்கயம் பற்றிநின்றார்
  பாவம் பற்றா நின்றார்
என்னிதயத் தாமரை நினக்கின்றேன்
  மலர்ந்தது உந்தன் எழிலார்
பொன்னைநிகர் பாத மலர்சேர்ப்பாய்
  என்ன சுத்தே என்அரசே
மன்னுபுகழ் திருவடி பணிந்தென்றும்
  போற்றினேன் போற்றி! போற்றி!.



கவிஞர் ச. ஜெயச்சந்திரன்
(கனடா)

அத்தகைய உத்தமமான குருவாகி கண்ணை இமைகாப்பது போல் எம்மை எல்லாம் காத்துவரும் சுவாமிஜி அவர்களின் நாமம் ஆகிய

"ஓம் கெங்காதரானந்தாய நம ஓம் கெங்காதாரனந்தாய நம:

கருக்கவர்ச்சியை போன்று மனம் புத்தி இவற்றோடு போராடிக் கொண்டிருக்கின்ற சூனிய அஞ்ஞான உணர்வுடன் இணைந்த ஜீவிதம் குருவின் அருளினால், குருபக்தியால் அக் கவர்ச்சியில் இருந்து விடுபட்டு ஜனன மரண வாழ்வைப் பற்றிய உண்மை விளங்கி பரம சாந்தி அளிக்கும் ஞான வாழ்வில் படர்ந்து நின்று குறைவற்ற நிறை வாழ்வு உண்டாகும்.

பா பா பதிக்கும் சுவடுகள்



காருண்ய சீலா! தீனதயாளா! புட்டபத்தி வாசா! சாயி ஈசா! பகவான் சத்திய சாயி ஈசன் பதிக்கும் சுவடுகளைக் கண்டும், கேட்டும், உணர்ந்தும், மெய் விதிர்விதிர்த்து, கண்ணீர் மல்கி நெஞ்சம் குழைகிறது.

# ஒரு விஞ்ஞானியின் வியப்பு

வே. வரதசுந்தரம்

1959ம் ஆண்டு பிரபல விஞ்ஞானி கலாநிதி பகவந்தம் அகில இந்திய நிறுவன இயக்குநர் – பகவான் சத்திய சாயி பாபாவை முதன் முதலில் சந்தித்தார்.

இயற்கை எழில் சிந்தும் சித்திராவதி நதிக்கரை ஓரமாக இருவரும் உலாவிக் கொண்டிருந்தார்கள். இருவரும் அமைதியாக அமர்ந்து கலந்துரையாட ஒரு பொருத்தமான இடத்தை தெரிவு செய்யுமாறு பகவான் விஞ்ஞானியிடம் சொன்னார்.

ஈற்றில் விஞ்ஞானி விரும்பிய இடத்தில் இருவரும் அமர்ந்தனர். இயற்கை தரும் இன்ப அமைதியைத் துய்த்தவாறு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர் "விஞ்ஞானிகளிடம் சில வேளைகளில் எல்லாம் எமக்கும் தெரியுமென்ற மெத்தப் படித்த போக்கு காணப்படுகிறதே. எமது பண்டைய இந்திய சிந்தனைகளில் காணப்படும் உண்மையை அவர்கள் உணர்வதாக இல்லையே" இவ்வாறு விளையாட்டாக பகவான் குறிப்பிட.....,

விஞ்ஞானியின் சுயமரியாதை கொதித்து எழுந்தது.!! அனைத்து விஞ்ஞானிகளும் அப்படியில்லையே பகவான்! என்னைப் பாருங்கள் நான் சமஸ்கிருதப் பாரம்பரியத்தில் வளர்ந்தவன். இந்திய ஆத்மீக சிந்தனை களில் நம்பிக்கை கொண்டவன்.

அணுகுண்டை வெடிக்கவைத்த பின்னர் விஞ்ஞானி ஒப்பன் கெய்மரிடம் அவரது மனோநிலையைப்பற்றி பத்திரிகையாளர்கள் கேள்விக்கணைகளைத் தொடுத்தனர் அப்போது அவர் பகவத்கீதை வாக்கியங்களை மேற்கோள் காட்டி பதிலளித்தாரென்றால், அந்த மாபெரும் விஞ்ஞானியிடம் இருந்த ஆத்மீக ஈடுபாட்டினை நாங்கள் உணர முடியும்"


இப்படிப் பலவாதங்களை அடுக்கிக் கொண்டு சென்ற விஞ்ஞானியிடம் பாபா திடீரென "உமக்கு பகவத்கீதை நூல் வேண்டுமா" என்று சொல்லியவாறு கையளவு மணலை எடுத்து "இதோ கையை நீட்டுங்கள்" என்றார். விஞ்ஞானி பகவந்தம் தனது இருக்கைகளையும் ஒன்று சேர்த்து பாபா சிந்திய மணலைப் பிடித்தார்.

என்னே அதிசயம்! விஞ்ஞானியின் கரத்தில் இருந்த மினு மினுக்கும் மணல் பகவத் கீதை நூலாக மிளிர்ந்தது. சிவப்புநிற அட்டையுடன் காணப்பட்டது. உருவாக்கப்பட்ட பகவத்கீதை விஞ்ஞானியின் தாய் மொழியாம் தெலுங்கில் எழுதப்பட்டும் இருந்தது.

கலாநிதி பகவந்தத்தின் அறிவியல் மனப்பாங்கு அந்நூலைத் துருவித் துருவிப் பார்க்கத் தூண்டியது. அழகுற அச்சிடப் பட்டிருந்த அது ஒரு புத்தம் புதிய நூல். வழமையாக நூல்களில் காணப்படும் ஆசிரியர், வெளியீட்டாளர், அச்சகத்தார் ஆகியோரின் பெயர் விபரங்கள் அந்த நூலில் காணப்படவில்லை.

அறிவியல் உணர்வுமிக்க விஞ்ஞானி பகவந்தம் வியந்து போனார்.

## உதிர்ந்த இதழ்கள் அழகிய மலர் மாலையான அதிசயம்



புட்டபர்த்தியில் பக்திச் சுவை சொட்ட பஜனை நடைபெறுகிறது. மேடையில் பகவான் சாயிபாபா அமர்ந்திருக்கிறார். தனது கையில் இருக்கிற மாலையில் உள்ள மலர்களைக் கிழித்து இதழ்களைத் தனது வாயிலிட்டு மெல்கிறார்.

இதனால் பகவானின் சொக்கு இருபுறமும் வீங்கியதுபோல் தோன்றுகிறது. அவர் யாரையோ பார்த்து கேலி செய்வதுபோல் தெரிகிறது. இக்குறும்புத் தனத்தைக் கண்ட அடியார்கள் அடக்க முடியாது சிரிக்கிறார்கள்.

ஒரு சில வினாடிகளில் பகவான் தனது வாயிலிருந்து ஓர் அழகிய பொருளை வரவழைக்கிறார். அதுவோ வண்ண வண்ண மலர்களால் தொடுக்கப்பட்ட மலர் மாலை. அது "எஸ்" எழுத்து வடிவில் காணப்பட்டது.

தன் வாயில் மென்ற இதழ்களைக் கொண்டு பகவான் தொடுத்த "எஸ்" வடிவ மாலை கண்டு அடியார்கள் என்றென்றும் சாயி பாபாவின் அற்புதத்தை, அருட் கருணையை நினைத்து, நினைத்து நெஞ்சுருகி, கண்ணீர் மல்கி வழிபடுவர்.

## தாமரை புகட்டும் படிப்பினை

"பழம் இனிமையானது. பழத்தை மூடியுள்ள தோலிருக்கிறதே, அது புளிப்பாக இருக்கலாம். இருப்பினும் பழச்சாறு (அது தோடம்பழச்சாறு அல்லது கரும்பஞ்சாறாக இருக்கலாம்) இனிப்பாக இருக்கும். இனிமை பயக்கும்.

அதுபோல கோபம், பொறாமை, பேராசை என்ற தோலை உரித்து, பழத்தின் சாறாகிய இன்பத்தை அனுபவியுங்கள். அந்த இன்பம் உங்களிடத்தே மலரட்டும்.

தாமரை மலரென வாழுங்கள். தாமரை சேற்றில் மலர்கிறது. நீர் மட்டத்துக்கு மேலே மலர்மட்டம் தெரியுமளவுக்கு அது வளர்ச்சி பெறுகிறது.

அதுபோன்று தாழ்ந்த நிலையிக்கும் மனிதன் உயர்ச்சி பெறலாம்.

தாமரை மலர் போதிக்கும் இன்னொரு படிப்பினையைக் காணலாம். தாமரை நீரிலிருந்து மலரும் அதே வேளையில் நீரினால் பாதிக்கப்படுவதில்லை. நீரில் நனைவதில்லை. நீர் தன்னை நனைக்காதவாறு பார்த்துக் கொள்கிறது.

தாமரை மலர்போல் பற்றறுத்து பற்றாக் களினால் தாக்கமடையாது வாழுங்கள். உய்தி பெறுங்கள். இப்படி பாபா அருளுரை வழங்குகிறார்."

(தொடரும்...)

# பயபக்தி தரும் பத்திரகாளி அம்மன்

சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்ததாகக் கூறப்படும் கர்ணபரம்பரைக் கதையொன்று பத்திரகாளி அம்பாளிடத்து பயபக்தியை ஸ்திரப்படுத்திக் கொண்டிருக்கிறது.

பண்டைக் காலத்தில் இவ்வாலயத்திலும் ஆலயச் சூழலிலும் அனாச்சாரமாக நடந்து கொள்வதற்கு மக்கள் பயப்படுவார்களாம்: இன்றும் அப்படித்தான்.

ஒரு நாள் ஒரு பெண் தலைவிரி கோலமுடன் அம்பாளின் சந்நிதானத்துக்கு முன்பாக உதாசீனமாகச் சென்றாள். அதனால் அப்பெண்ணுடைய தலை ஒரு பக்கம் திரும்பிவிட்டதாம் (கழுத்து வாங்கல்).

அம்பாளுக்கு அபசாரஞ் செய்து விட்டதாக அப்பெண் சொற்பனங் கண்டு குற்றத்தை உணர்ந்து ஆலயத்துக்கு வந்து தனது தலைமயிர்களைக் கத்தரித்து நேர்கடனாகக் கொடுத்த பின்பு தான் தலையைச் சரியான நிலைக்குத் திருப்பக் கூடியதாயிருந்ததாம்.

அந்தப் பெண் நேர் கடனாகக் கொடுத்த தலைமயிரை பாதுகாத்து வைத்திருந்து மகிஷாசூர சம்மாரம் நடைபெறும்போது அம்பாளுடைய சடைமுடியோடு சேர்த்துக் கட்டி அலங்கரிக்கும் வழக்கம் இருந்து வத்ததாம். அந்த மயிர்களில் ஒரு பகுதி இன்றும் இருப்பதாகக் கூறுகிறார்கள்.

முன்னொரு காலத்தில் இவ்வாலயத்தில் பூசை செய்து கொண்டிருந்த குருக்கள் ஒருவர் இரவு பூசையை முடித்துக் கொண்டு திருக்கதவை அடைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்று விட்டார். தனது பிள்ளை ஆலயத்தினுள் இருந்ததை அவர் காண வில்லை. வீட்டுக்குப் போய்ச் சாப்பாட்டு வேளையில் பிள்ளையைக் காணாமல் எங்கும்



தேடிவிட்டு ஆலயத்துக்கு வந்து பார்த்த போது பிள்ளை அங்கிருப்பதைக் கண்டு மனைவியிடம் கூறினாராம்.

பூசை முடிந்து கதவடைத்த பின் ஆலயத்தைத் திறப்பது சாஸ்திர விரோதமானது. அதனால் காலையில் பார்க்கலாம் என்று கூறியும் மனைவி ஏற்றுக் கொள்ளாமல் அடம் பிடித்தாளாம். அதனால் குருக்கள்

**சைவப் புலவர் இ. வடிவேல்**



ஆலயத்தைத் திறந்த போது காவல் தெய்வமாகிய வைரவர் அந்தப் பிள்ளையை இரண்டாகக் கிழித்துப் போடுவதைக் கண்டாராம்.

1980 இல் சம்புரோட்சன கும்பாபிஷேகம் நடைபெற்றது. மண்டப வாசலுக்கருகே மணிக்கூட்டு கோபுரத்தை நாற்படி உயரத்துக்கு உயர்த்திக்கட்டி அறுநூறு இறாத்தல் எடையுள்ள கண்டாமணி புதிதாக ஏற்றப் பட்டிருக்கிறது. 1972இல் சித்திரத் தேர்கள் மூன்று செய்யப்பட்டு ரதோற்சவத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறன்றன. கிழக்கிலங்கையில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் இதுவாகும். 1981 இல் இத்தேர்களைப் பாதுகாப்பதற்குப் பெருஞ் செலவில் தேராலயம் ஒன்று அமைக்கப்பட்டது. வைகாசிப் பூரணை வரும் தினம் எதுவோ அதற்கு முன்னர் வரும் திங்கட்கிழமை திருகோணமலை பத்திரகாளி கோயில் பொங்கலும், இத்தினத்துக்கு முன்னர் வரும் திங்கட்கிழமை பாலம்போட்டாற்றுப் பத்தினி அம்மன் பொங்கலும், இந்தத் தினத்தை அடுத்து வரும் செவ்வாய்க் கிழமை சல்லி அம்மன் கோயில் பொங்கலும் நடைபெற்று வருகின்றன. இந்த ஒழுங்கு பண்டு தொட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.

இதனால் வைகாசி மாதம் முழுதும் திருகோணமலையில் சக்தி வழிபாடு பக்தி வெள்ளத்தில் மூழ்கியிருப்பதைக் காணலாம்.

பத்திரகாளி அம்மன் பொங்கல் ஆலயத்தைச் சுற்றியுள்ள வீதியில் நடைபெறும். பொங்கலுக்குரிய இடம் பிடிப்பதில் மக்கள் ஒருவரை ஒருவர் முந்திக் கொள்வார்கள். அன்றிரவு முழுவதும் ஆலய வீதி யாகசாலை போல் காட்சியளிக்கும். புகை மண்டலம் இருளை மூடி இருண்டு நிற்கும். அக்கினி தேவன் வீதியெங்கும் பிரகாசித்துக் கொண்டிருப்பான்.

அம்பாளின் பொங்கல் மண்டப வாசலில் வெளியில் நடைபெறும். அடியார்களின் பொங்கல் வீதியெங்கும் நடைபெறும்.

அம்பாளின் பொங்கற் பிரசாதமும் அடியார்களின் பிரசாதமும் தேவிக்குப் படைக்கப்பட்டு, பூசை நடைபெற்று பொங்கல் விழா நிறைவேறும்.

நன்றி : *திருகோணமலை மாவட்ட திருத்தலங்கள்.*

# யோகசுவாமி வாழ்வில்

ஒரு நாள் நண்பகல் பன்னிரண்டு மணி இருக்கும். யோகர் சுவாமிகளின் சந்நிதானத்தில் சிலரிருக்கும் போது, எங்கோ ஒரு தூரக் கிராமத்தில் இருந்து ஒரு வயது சென்ற பெண்மணி அங்கு வந்தாள்.

ஏழைக் குடும்பத்துப் பெண் போலத் தோன்றியது. வரும்போது, ஒரு பெரிய பலாப்பழத்தைத் தன்தலைமேல் சுமந்து கொண்டு வந்து, சுவாமியின் முன் இறக்கி வைத்து விட்டு, வந்த களைப்புத் தோன்ற "அப்பாடி" என்று பெருமூச்சு விட்டுச் சுவாமிகளின் முன் உட்கார்ந்தாள்.

இதை எல்லாம் ஒன்றும் பேசாது பார்த்துக் கொண்டிருந்த சுவாமி பெண்மணியை நோக்கி: "இஞ்சாய், உனக்கென்ன பைத்தியமா? இந்த வெய்யிலுக்கை, இவ்வளவு தூரம் நடந்து இந்தப் பெரிய பிலாப்பழத்தையுங் கொண்டு ஏன் வந்த நீ" என்றார்.

"அது நானெல்லோ காவிக் கொண்டு வந்தது; நீ ஏன் போட்டடிக்கிறாய்? என்ரை ஆசைக்கு நான் கொண்டு வந்தேன். அதுக்கு உனக்கென்ன? நீ ஒன்றும் எனக்குக் கூற வேண்டாம். நான் கொஞ்ச நேரம் இருந்து விட்டு ஆறிக்கொண்டு போகிறேன் – என்றாள். வஞ்சகம், சூது, வாது தெரியாத அந்தக் கிராமியப் பெண்.

யோகர் சுவாமி தன் வாயிலே கையை வைத்து பரிவுடன் அவளைப் பார்த்து

"நீ நல்லாயிருந்து விட்டுப் போ" என்றார்.

அந்தப் பெண்மணியின் களங்கமற்ற உள்ளத்தை வியந்து கொண்ட சுவாமி, தன்முன் இருந்த தோடம்பழம் ஒன்றை எடுத்து அந்தப் பெண்மணியிடம் கொடுத்து "இந்தானை, நீ போய் நல்லாயிரு" என்று ஆசீர்வதித்தார்.

உவந்து மனங்குவிந்து, ஒன்றுக்கு மஞ்சாது
அகந்தை அவாவெகுளி யகற்றிச் – சகந்தனிலே
தாமரையிற் தண்ணீர் போல் சாராமற் சார்ந்துநற்
சேமமொடு வாழ்வாய் தெளிந்து

- மு. வைரமுத்து -

# உள்ளார்ந்த யாத்திரை

(பிரம்ம குமாரி டடி பிரகாஷ் மணி)



*உயிர் கூட்டத்தில் முதன்மை வாய்ந்தது மனித சமுதாயம் இருப்பினும் மனிதனின் மனதில் பகைமை உணர்வு தலைதூக்கி உள்ளது. வன்செயல் பரந்து காணப்படும் இன்றைய உலகில், பகைமை, கசப்புணர்வு காரணமாக மனிதன் தனக்குத் தானே பகைவனாகியுள்ளான். அது மட்டுமல்ல முழு உலகுக்கே பகைவனாகி விட்டான். மனித சமுதாயமே மானுட நேயத்தை இழந்து விட்டது என்று தோன்றுகிறது.*

*சீரிய விழுமியங்கள், ஞானம், ஆகியவற்றின் கொள்கலமாக விளங் கியவன் மனிதன் அவனால் செய்ய முடிவதை வேறு எந்த சீவராசியாலும் செய்ய முடியாது அவன் நினைத்தால் உலகை வாழவைக்கலாம். அல்லது அதனை முழுமையாக அழித்து விடலாம்.*

*இன்று மனிதனுக்கு இலட்சியம் இல்லை. உலக கவர்ச்சிகளினால் அவன் ஈர்க்கப்படுகிறான். நிலையற்ற செல்வத்தை நிலையான இன்பமென அலமந்து நிற்கிறான் மனிதன். ஆனால் இது உண்மையிலே கானல் நீராகும்.*

*நிலையான உண்மையான இன்பத்தை தன்னை உணர்வது மூலம் மனிதன் அடையலாம்.*

*தன்னை உணர்தல் மூலம் உங்கள் சிந்தனைக்கு, செயலுக்கு ஒரு புதிய பரிமாணம் ஏற்படும்.*

*உங்களின் உள்ளார்ந்த யாத்திரை அப்போது ஆரம்பமாகும்.*

# கண்ணப்பர் காட்டிய அன்பு

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

**திருக்கோயில் சூழல் சிவகோச்சாரியார்களைத் தோற்றுவிப்பதாகவே உள்ளது. கண்ணப்பர்கள் உருவாகும் சூழ்நிலை இல்லை. தானே வழிபாடியற்றுதல் தான் நல்ல வழிபாட்டு முறை. இந்த வழிபாட்டு முறையில் தான் கண்ணப்பர்கள் தோன்றமுடியும்.**

சிவகோசரியார் மரபுவழி – விதிமுறைப்படி – பொருள்பற்றிப் பூசை செய்தவர். நாள்தோறும் பொன்முகலி யாற்றில் நீராடி விதிமுறைப்படி பூசை செய்தல் சிவகோசரியாரின் வழக்கம்.

திண்ணனாருக்கு– கண்ணப்பருக்குப் பூசை பழக்கத்தில் இல்லாத ஒன்று. கண்ணப்பர் வேடுவர் குலத்தைச் சார்ந்தவர். குல மரபுப்படி வேட்டையாடும் தொழிலைக் கற்றவர். அவர் இயற்பெயர் திண்ணனார்.

தோழன் வாயிலாக அவர், 'மலை உச்சியில் குடுமித்தேவர் இருப்பார்; கும்பிடலாம்'' என்று கூறக் கேட்டார். குடுமித் தேவரைக் காணும் ஆர்வம் திண்ணனாருக்குப் பொங்கி வழிந்தது. திண்ணனார் மலை ஏறுகிறார். உடற்சுமை குறைகிறது; ஆன்மா தூய்மையுறுகிறது. திண்ணனாருக்கும் அவர்தம் அன்புக்கு மிடையே போட்டி.

திண்ணனாரின் அன்பு முன் செல்கிறது. திண்ணனார் குடுமித் தேவரைக் கண்டார். நிலமிசை வீழ்ந்து வணங்கினார்; எழுந்தார்; மீண்டும் வீழ்ந்து வணங்கினார்; காளத்தி அண்ணலை நோக்கினார், திண்ணனார்.

"காளாத்தி அண்ணல் சாலப் பசித்திருக்கிறார்'' என்று உணர்கிறார். "பொறுத்திரு ! சடுதியில் சென்று உணவு கொண்டு வருகிறேன்'' என்றார்; ஓடினார்; ஓடினார்; வேட்டையாடினார் பன்றி அறுத்து இறைச்சியாக்கினார்; அனலில் சுட்டார்; வாயில் போட்டு சுவை பார்த்தார். ஆனால் சுவையை அனுபவிக்கவில்லை.

பக்குவப் படுத்திய இறைச்சியைத் தேக்கிலையில் எடுத்துக் கொண்டார். "என் அப்பன் காளத்தி அப்பன் குளித்திருக்க மாட்டானே!'' என்று எண்ணினார். குளிப்பாட்டத் தன் வாய் நிறையத் தண்ணீர் எடுத்துக் கொண்டார். பூக்களைத் தலையில் எடுத்துக் கொண்டார்; விரைந்து காளத்தியப்பன் சந்நிதிக்கு வந்தார்.

திண்ணனார் வாயில் கொண்டு வந்த தண்ணீரைக் காளத்தியப்பர் மீது சொரிந்து திருமஞ்சமாட்டினார்; தலையில் இருந்த பூக்களை எடுத்துச் சூட்டினார். பின், கையில் தேக்கிலையில் கொண்டு வந்த ஊனை இறைவன் முன் படைத்து உண்ணுமாறு வேண்டினார். 'நான் சுவைத்துப் பார்த்தேன் நன்றாக இருக்கிறது; உண்ணுக!' என்று இறைவனை வேண்டினார்.



மாலைப் பொழுது வந்தது; இருள் சூழ்ந்தது, ''அப்பனே, இருட்டில் தனியாக இருக்கிறாயே! துணை வேண்டாமா?'' என்றெல்லாம் நீளநினைத்தார். இரவெல்லாம் விழித்து நின்று காத்தார்.

இந்தப் பூசை ஆகம வழிப் பூசையல்ல. புனல், பூ, தூபம், தீபம், மணியோசை முதலியன இல்லை. திண்ணனாரின் இந்தப் பூசையை இறைவன் விரும்பினார்; திண்ணனார் மெய் தீண்டும் பொழுதெல்லாம் மெய் குளிர்ந்தான். இதனால் வேடர் திண்ணாரின் அன்பு, அன்பின் ஆற்றல் தெரிந்தது. முடிவு என்ன?

பொருட்பற்றிச் செய்கின்ற பூசைகள் இறைவன் விரும்புவன் அல்லன். அருச்சனை என்னும் வெறும் வயல்

மட்டுமே பரந்து கிடந்தால் பயனுண்டோ அந்த அருச்சனை வயலுள் அன்பை விதைக்க வேண்டாமா? இறைவன் மலைதான்! ஆனால், அன்பெனும் பிடியுள் அவன் சிக்குவான்!

**இறைவன் மலைதான், ஆனால் அன்பெனும் பிடியுள் அவன் சிக்குவான்.**

சிவகோசரியார் செய்த பூசை பொருள் பற்றிச் செய்த பூசை. திண்ணனார் செய்த பூசை அன்பு பற்றிச் செய்த பூசை, அதனாலன்றோ சிவகோசரியாருக்குக் கண்ணிடந்து அப்பும் பேறு கிடைக்கவில்லை. திண்ணனாருக்கே அந்தப் பேறு கிடைத்தது. ஏன் கண்ணிடந்து அப்ப வேண்டிய நிலை?

காளத்தியப்பருக்குக் கண்ணில் உதிரங் கொட்டல் நோய், வரவழைத்துக் கொண்ட நோய். திண்ணனாரின் அன்பை – அன்பின் பெருக்கை அளந்து காட்ட வேணடும் – சிவகோசரியாருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும்.

அன்பைப் புலப்படுத்துவன, அன்பின் அளவைப் புலப்படுத்துவன கண்கள்தாம். திண்ணனாரின் அன்பை யாருடைய கண் கொண்டு அளப்பது? அளந்தறிவது? எவருடைய கண்களும் – காளத்தியண்ணல் கண்களும் கூடத் திண்ணனாரின் அன்பை அளந்து காணும் ஆற்றலுடையன அல்ல. எனவே, திண்ணனாரின் அன்பின் பெருக்கத்தைத் திண்ணனார் கண்களைக் கொண்டேதான் பார்க்க வேண்டும்; பார்த்து அனுபவிக்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தான் காளத்தியப்பருக்குக் கண்ணில் உதிரப்பெருக்கு ஏற்பட்டது.

பொருட்பற்றிப் பூசனை செய்த சிவகோசரியார் செயலற்றவராகிறார். திண்ணனார் விரைந்து செயற்படுகிறார்; தமது கண்ணை இடந்து அப்புகிறார். திண்ணனார் கண்ணப்பராகிறார்! அன்பு கண்ணப்பராகிறது! கண்ணப்பர் அன்பின் பிழம்பாய்த் தெரிகின்றார்.

இன்றைய திருக்கோயில் வழிபாட்டு நிலையில் பொருட்பற்றிச் செய்கின்ற பூசைகளே பெருகி வளர்ந்து வருகின்றன. பொருட்பற்றிய பூசையிலும் கூடத் 'தான்' கெடாமல் செய்யும் பூசைகளே மிகுதி. தான் கெடாதது மட்டுமின்றித் தன்னுடைய தேவைகளை, இல்லை, இல்லை அவாக்களை அடுக்கிவைத்து அருள்பாலிக்கும்படி வேண்டிச் செய்யும் வணிகத் தன்மை வாய்ந்த பூசைகளே மிகுதி!

''வேண்டத்தக்கது அறிவோய்'' என்றும் ''வேண்டுவதும் உன்தன் விருப்பன்றே!'' என்றும் தொழுது அழும் பக்தர்கள் தேடினாலும் கிடைப்பதில்லை.

**சிவ கோசரியார் செய்த பூசை பொருள் பற்றிச் செய்த பூசை. திண்ணனார் செய்த பூசை அன்பு பற்றிச் செய்த பூசை**

இன்று எங்கும் அன்பு வழிபாடு அருகி ஆசையினால் இயற்றும் வழிபாடே மலிந்து விட்டது.

திருக்கோயில் சூழலும் 'சிவ கோசரியார்'களைத் தோற்றுவிப்பதாகவே உள்ளது. 'கண்ணப்பர்கள்' உருவாகும் சூழல் அறவே இல்லை.

பழங்காலத்தில் சிவாசாரியர்கள், திருவுருவங்களில் இறைவனை (ஆவாகனம் செய்து) எழுந்தருளச் செய்து வைத்தனர். அவ்வாறு எழுந்தருளச் செய்தபின் பக்தர்கள் நேரிடையாக மூர்த்தியின் திருமேனி தீண்டிப் புனலும் பூவும் சொரிந்து வழிபடவும், அணைத்து உச்சிமோர்ந்து வழிபாடியற்றவும் உரிமைகள் இருந்தன.

தானே வழிபாடியற்றுதல்தான் – செய்வதுதான் நல்ல வழிபாட்டுப் பயிற்சிமுறை. இந்த வழிபாட்டு முறையில் தான், 'கண்ணப்பர்கள்' தோன்ற முடியும். நாடு முழுவதும் உள்ள திருக்கோயில்களின் வரலாறுகளைப் படித்தால் இந்த உண்மை புலனாகும்.


கண்ணப்ப நாயனார்

திருமுறைகளில், பக்தர்கள் திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனியைத் தீண்டி வழிபாடியற்றினர் என்பதற்கு நிறையச் சான்றுகள் உள்ளன. அப்பரடிகள் பாடிய திருவையாற்றுப் பதிகத்தில் வரும்,

*"போதொடு நீர் சுமந் தேத்திப்*
*புகுவார் அவர் பின் புகுவேன்"*

என்ற அடியை நினைவு கூர்க.

பக்தர்கள் அனைவரும் திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனியைத் தீண்டி வழிபடும் உரிமை இன்றும் வடபுலத்தில் – காசி முதலிய திருத்தலங்களில் நடைமுறையில் உள்ளது. இதனால் என்ன குறை வந்துவிட்டது?

சம்பிரதாயம் என்ற பெயரில் பொருட்பற்றிச் செய்யும் பூசையை மட்டுமே வளர்த்து அன்பையும் அன்பைப் பற்றாகக் கொண்டு செய்யும் வழிபாட்டையும் புறத்தே தள்ளி, இறைவனிடமிருந்து பக்தர்களை அந்நியமாக்கினால் என்ன செய்வது? காலப் போக்கில் மக்கள் திருக்கோயில் களிலிருந்து விலகுவர். இதனைத் திருமுறை ஆர்வலர்கள் சிந்தனை செய்க!

கையில் தேசப்படங்கள் வைத்திருப்பவர்கள் எல்லாம் தேசங்கள் அனைத்தையும் பார்த்திருக்கிறார்கள் என்று முடிவுகட்டலாமா? கையில் தேசப்படங்கள் வைத்திருக்காதவர்கள் ஒரு தேசத்தையும் பார்த்ததில்லை என்று முடிவு கட்டலாமா?

தேசப்படங்களை வைத்திருத்தலும் வேண்டும்; தேசங்களைச் சுற்றிப் பார்த்தலும் வேண்டும்.

அதுபோல தெய்வச் சின்னங்களை வைத்திருப்பதால் அவை ஆராதிக்கப்படுகிறது என்பதல்ல. கர்மங்களைச் செய்துவிட்டதால் ஆராதனை நிகழ்ந்தது எனலாமா?

# ஒற்றைக் கொம்பன்

சுவாமி சித்பவானந்தா

பூஜை மட்டும் உண்மையானதாக இருக்குமானால், தடைகள் யாவும் தவிர்க்கப் படுவதை மனிதன் காண்பான்.

விக்கினேசுவர பூஜையில் உணவு மிகவும் முக்கியமானது. நல்ல தின்பண்டங்களைப் படைப்பதே தும்பிக்கையானைத் தொழுவதற்கு ஏற்ற உபாயம்.

சத்துள்ள நல்லுணவில் அவன் விருப்பம் வைத்துள்ளான் என்பது கோட்பாடு. மிகைபட உண்பவனுக்கும், குறைபட உண்பவனுக்கும் இடுக்கண்கள் பல நேர்கின்றன. குறித்த வேளைகளில் உணவை ஏற்பதே விக்கினேசுவர பூஜையாகும்.

கணபதிக்குப் படைத்த கனி, அப்பம், அவல், பொரி போன்ற தின்பண்டங்களைச்



சிறுவர்களுக்கு ஏராளமாகப் பகுத்துக் கொடுப்பது முறை.

அவ்வாறு சிறுவர்கள் அடையும் திருப்தி, தெய்வத்தின் திருப்தியாகும்.

ஏதேனும் நல்ல செயல்களைத் தொடங்குவோர் நல்லவர்களான சிறுவர்களைத் திருப்திப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதனால் அனுகூலமான சூழ்நிலை ஏற்படும், விக்கினேசுவர பூஜை இதுவே.

புதிதாகத் துவங்கும் ஒவ்வொரு காரியத்துக்கும் கணபதியின் துணை வேண்டும். அவன் அருளுக்கு இலக்கு ஆகிற செயல் வெற்றிகரமாக நிறைவேறும்.

கணபதியை வலம்வருவது ஒருவித வழிபாடு. மும்முறை குட்டித் தோப்புக் கரணம் போடுவது ஒரு முறை, விநாயகர் முன்னிலையில் தேங்காய் எறிதல், விதம்விதமான உணவுப் பொருள் படைத்தல், அவனுக்கு அபிஷேகமும் அலங்காரமும் செய்தல் - இப்படி இன்னும் சிலரால் அவன் ஏத்தப்படுகிறான்.

கணபதிக்கு ஏகதந்தன் என்று ஒரு பெயர். ஒற்றைக் கொம்பன் என்பது பொருள். வியாச பகவான் மகாபாரதத்தைச் சொல்லிக் கொண்டு போகையில் கணபதி அதை எழுதி முடித்ததாக ஓர் ஐதீகம் உண்டு.

இடையில் எழுத்தாணி உடைந்து போய் விட்டது. ஆனால் எழுதும் வேலையை நிறுத்துவது ஒண்ணாது. தனது தந்தங்களில் ஒன்றை ஒடித்து அவ் வேலையைச் செய்து முடித்தான்.

அன்று முதல் அவன் ஏகதந்தன் ஆகிவிட்டான், அவன் உருவத்துக்கு ஊனம் வந்தது. முறித்தெடுத்த தந்தத்தைத் தனது வலக்கரத்தில் அவன் பிடித்திருக்கிறான். இது தியாகத்தின் அறிகுறியாகும்.

ஒரு நல்ல காரியத்தின் பொருட்டுத் தன்னிடம் இருக்கும் சிறந்தது ஒன்றைத் தியாகம் பண்ணாதவன் செயற்கரியதைச் செய்து சாதிக்க முடியாது. தனக்கு உரியதைப் பொது மக்களுக்கு உரியதாக்கும் முறையில் தியாகம் செய்யாது யாரும் மேலோர் ஆனது கிடையாது.

ஓர் உயர்ந்த காரியத்தின் பொருட்டுத் தனது அவயங்களில் ஒன்றை இழந்து விட்டதே கணபதிக்கு அலங்காரம்.



எனது மனைவியை முதலாவது மகப்பேற்றுக்காக திருக்கோணமலை வைத்திய சாலையில் அனுமதித்து மூன்று நாட்கள் கடந்தும், பிரசவ வேதனை அதிகரித்துக் கொண்டு போனதே தவிர பிரசவம் நடைபெறவில்லை.

அதன் காரணமாக சத்திர சிகிச்சை செய்ய வேண்டுமெனக் கூறிய "டாக்டர்கள்", 1979 யூன் மாதம் 4ந் தேதி மாலை மூன்று மணியளவில் "அம்புலன்ஸ்" வண்டி மூலம் அனுராதபுரம் வைத்திய சாலைக்கு அனுப்பிவைத்தனர்.



அம்புலன்ஸில் என்னை அழைத்துச் செல்ல மறுத்துவிட்டனர்.

மறுநாள் காலையில் தான், அனுராதாபுரத்திற்கு பஸ். என்ன செய்வதென்று தெரியாது மனஞ் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்த வேளை, எமது குடும்ப ஆலோசகராகவும், அன்பராகவும் திகழ்ந்து வந்த மதிப்புக்குரிய சிவசுப்பிரமணியம் ஐயா அவர்களின் திரு உருவம் என் மனதில் தோன்ற திருக்கோணமலை, அருணகிரி வீதியில் அமைந்திருந்த அவரின் இல்லத்திற்குச் சென்றேன்.

ஐயாவைக் கண்டு அவரிடம் விடயத்தைக் கூறிய போது, அங்கு நின்றிருந்த அவரின் அக்காவான போற்றுதலுக்குரிய சிவகாமி அம்மா,

கெ. தர்மகுலராசா
(திருகோணமலை மாவட்ட நீதிமன்றம்)

"மகனே! கவலைப்படாதே, இன்று பத்திரகாளி அம்மாளின் பொங்கல், இங்கே காளி ஆச்சிக்குப் பொங்கல் பானை ஏற, அங்கே குழந்தை சுகமாகப் பிறக்கும்" என்று சொன்னார். அந்த வாக்கைக் கேட்டதுமே, சஞ்சலப் பட்டும், கவலைப் பட்டுங் கொண்டிருந்த என் மனதில் அம்பாளே கூறிய அருள்வாக்குப் போல, சாந்தியும் திடசங்கற்பமும் ஏற்பட்டது.

மகனே,
கவலைப் படாதே
இன்று பத்திர
காளி அம்பாளின்
பொங்கல்.
இங்கே காளி
ஆச்சிக்குப்
பொங்கல்
பானை ஏற
அங்கே
குழந்தை
பிறக்கும்.

உடனேயே ஆறு மைல்களுக்கு அப்பாலிருந்த எனது சொந்த ஊரான நிலாவெளிக்குச் சென்று, மாற்று உடுப்புக்களும் எடுத்துக் கொண்டு, எனது மனைவியின் தாயாரையும், தம்பியையும் அழைத்துக் கொண்டு அன்றிரவு சிவகாமி அம்மாவின் வீட்டிலேயே தங்கிநின்று மறுநாட்காலை முதல் பஸ்சில் அனுராதபுரஞ் சென்று வைத்திய சாலையை அடைந்தோம்.



# பக்தையின் நம்பிக்கையும் பத்திரகாளி அம்பாளின் அருளும்

மதியம் பன்னிரண்டு மணிக்கே ''வார்ட்''டினுள் செல்ல அனுமதித்தனர்.

அங்கே கட்டிலருகே என் மனைவி நின்று கொண்டிருந்தாள். எனக்கு ஒரே ஆச்சரியம்!

'பிரசவவலியால் துடித்துக் கொண்டிருந்தவள்; 'சத்திரசிகிச்சைதான் ஒரே வழி' என்று இங்கே அனுப்பிவைக்கப்பட்டவள்; எப்படி இவ்வளவு விரைவில் சுகமாகி எழுந்து கட்டிலருகே நிற்கிறாள்? எனவியந்து அருகில் சென்றபோது மனைவியின் கட்டிலில் அழகான புத்தம் புதிய மலராக ஆண் குழந்தை ஒன்று. அதைக்காட்டி ''நேற்று இரவு சுகமாகப்பிறந்திற்றான்'' என்றாள். அவளது முகத்திலோ தாய்மையின் பூரணமான ஒளி வீசியது. எனக்கோ, என்ன சொல்வது என்றே தெரியவில்லை. எனது மனைவியோ தொடர்ந்து, ''ஒப்பரேசன் செய்ய வேண்டுமென இரவு ஏழு மணிபோல் தியேட்டருக்குள் கொண்டு போனார்கள். டாக்டர் வயிற்றை அமர்த்திப் பார்த்து விட்டு 'இதனைப் பெற வைக்கத் தெரியாமலா இங்க அனுப்பினவையள்' என்று கூறியபடி வயிற்றினைச் சரிசெய்தார்.

சிறிது நேரத்தில் மயக்கம் வருமாப்போல் இருந்தது, வெள்ளைச் சேலையுடன் யாரோ நடமாடுவது போல் தோன்றிற்று. கண்விழித்துப் பார்த்தபோது இதே கட்டிலில் கிடந்தேன்'' என்றாள்.

சிவகாமி அம்மா சொன்ன அதே வார்த்தை ''இங்கே காளி ஆச்சிக்குப் பொங்கல் பானை ஏற அங்கே குழந்தை சுகமாகப் பிறக்கும்'' அந்த அருள் வாக்கு நிறைவேறியதை எண்ணி மெய்சிலிர்த்து விதிர் விதிர்த்து அவ்வாக்கினை என் மனைவியிடங்கூறி ஆனந்தக் கண்ணீர் உகுத்தேன்.

அன்று மாலையே ரிக்கற் வெட்டி சுகமாக எமதில்லம் வந்து சேர்ந்தோம்.

அபிராமிப் பட்டரின் ''அமாவாசையன்று பௌர்ணமி வரும்'' என்ற வாக்கைக் காப்பாற்ற ஆதி பராசக்தியே தனது தாடங்கத்தை வானில் வீசி நிலவைத் தோற்றுவித்தது போல சிவகாமி அம்மாவின் வாக்கை நிறைவேற்ற பத்திரகாளி அம்பாள்தான் சுகப்பிரசவத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என எண்ணி மெய்மறந்து மனதார சிவகாமி அம்மாவையும், பத்திரகாளி அம்மாளையும் துதித்தோம்.

இன்றுவரை பத்திரகாளி அம்மாளின் வைகாசிப் பொங்கலில் கலந்து கொள்வதோடு ஆண்டுகள் பதினெட்டுக் கடந்து இளைஞனாக வலம் வரும் எமது மகனைக் காணுந்தோறும் மட்டுமல்ல, எப்போதுமே சிவகாமி அம்மாவின் பசுமையான நினைவுகளோடு வாழுகின்றோம்.

இவ்வாறு பலரின் நினைவுகளில் வாழும் சிவகாமி அம்மாளின் நினைவு நிறுவன வெளியீடாக வரும் 'சந்நிதி' பல்சமய இதழ் தொடர்ந்து தன் பாதையில் வீறு நடைபோட்டுக் கொண்டேயிருக்கும் என்பதில் ஐயமேதுமில்லை.

## சிவசுப்பிரமணியம் நினைவுப்பரிசில்



*மாணவ, மாணவியரே!*

கோயில் அற்புதங்கள், ஒழுக்கம் சமயம் சார்ந்த உங்கள் ஆக்கங்களை உங்கள் புகைப்படத்துடன் அனுப்பி வையுங்கள். தகுதி கண்டு மகிழ்வுடன் பிரசுரிப்போம்.

பிரசுரமாகும் உங்கள் படைப்புகளுக்கு நடுவர் குழுவின் சிபார்சுக்கமைய சிவசுப்பிரமணியம் நினைவுப் பரிசில்கள் வழங்கப்படும்.

*முதற் பரிசு: ரூ 300/=*
*இரண்டாம் பரிசு ரூபா 200/=*
*மூன்றாம் பரிசு ரூபா 100/=*

ஆக்கங்களுடன் பின்வரும் கூப்பனை இணையுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி
ஆசிரியர்
சந்நிதி
39, 36வது ஒழுங்கை,
கொழும்பு-06

### சந்நிதி -சிவசுப்பிரமணியம் நினைவுப் பரிசில்

முழுப் பெயர்:..............................
முகவரி:..............................
..............................
வகுப்பு:..............................
பாடசாலை:..............................

இது எனது சொந்த ஆக்கம்

.............................. ..............................
பாடசாலை அதிபர் / ஆசிரியர் மாணவர் கையொப்பம்
பெற்றோர் கையொப்பம்
திகதி:..............................

பாபா சொன்ன கதை

# எண்ணியவாறு வருவான் இறைவன்

சில நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவம் இது. கோவர்த்தன என்ற பட்டினத்தில் ஸ்ரீநாத் என்று அழைக்கப்படும் ஆலயம் ஒன்று இருந்தது. அப் பட்டினத்தில் ஏழைப் பிராமணர் ஒருவருக்கு ஆறு வயதுப் புதல்வன் ஒருவன் இருந்தான்.

அச்சிறுவன் எந்நேரமும் கிருஷ்ண பரமாத்மாவின் அற்புத வரலாற்றைப் புகழ்ந்து சொல்லிக் கொண்டே இருப்பான். ஒரு நாள் அச்சிறுவன் மந்தைகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்றான். வழியில் ஒரு ஆலயத்தைக் கண்டான். அந்த ஆலயத்தினுள் கிருஷ்ணரின் திருவுருவம் இருப்பதைப் பார்த்தான்.

இத்திருவுருவத்தையே உண்மையான கிருஷ்ண பரமாத்மா என்று அவன் எண்ணிக் கொண்டான். ஆலயத்தினுள் சென்று தன்னுடன் விளையாட வரும்படி கிருஷ்ண பரமாத்மாவை அன்புடன் வேண்டினான். கிருஷ்ணரின் திருவுருவம் வைக்கப்பட்டிருந்த அறையோ பூட்டப்பட்டிருந்தது.

ஆனால் சிறுவனின் இரக்கமான வேண்டுகோள் பலனளித்தது. கண்ணன் சிறுவனுடன் கைகோர்த்தபடி வயல் வெளியில் குதூகலமாக விளையாடியபடி சென்றான். கண்ணனின் கையில் புல்லாங் குழல் இருந்தது. பிராமணச் சிறுவன் கண்ணபிரான் புல்லாங் குழல் இசைப்பதை ரசித்துக் கொண்டிருந் தான். சில மணித்தி யாலங்களின் பின்னர் சிறுவன் கண்ணனுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தான் கண்ணனைச் சகோதரன் என்றே சிறுவன் அழைத்தான் திடீரென்று ஆலயத்தினுள் கண்ணன் புகுந்து கொண்டான்.

கண்ணனின் பிரிவு சிறுவனை நன்றாக வாட்டியது. அன்று இரவும் பகலும் ஆலயத்தின் வெளியில் நின்று சிறுவன் அழுதான். சிறுவனைத் தேடி அலைந்த பெற்றோர்கள் ஆலயத்தின் முன் சிறுவன் அழுது கொண்டு நிற்கக் கண்டனர். இப்படித் தொல்லை தருவதற்காகப் பெற்றோர் சிறுவனை அந்த இடத்தில் வைத்தே நன்றாக அடித்தனர்.


அந்த ஆலயத்தின் பூசகரோ உள்ளே இருக்கும் கிருஷ்ணரின் திருவுருவத்தில் இருந்து இரத்தம் வருவதைக் கண்டார். சிறுவனுக்கு விழுந்த அடிதான் இதற்குக் காரணம் என்று உணர்ந்தார். இச் சம்பவம் எதனை உணர்த்துகின்றது?

நீங்கள் இறைவனை எப்படி உருவகிக்கிறீர்களோ அதன்படியே அவர் உங்களுக்குக் காட்சியளிப்பார்.

இளைய சகோதரனாக இறைவனைக் கருதினால் அது போன்று உங்களுடன் வந்து விளையாடுவார்.

குருவாக எண்ணினால் அப்படியே வந்து உங்களை வழிநடத்துவார்.

விசுவாசத்துடன் அழைப்பவர்களின் வேண்டுகோளை இறைவென் உதாசீனம் செய்வதில்லை.



தமிழில் : சி. குருநாதன்
(சிவநெறி ஆசிரியர்)



# தவ வலிமை

சுவாமி சச்சிதானந்தா

சாதாரண ஒரு துணிகூட தூய்மை அடைவதற்கு தவம் செய்ய வேண்டும்.

இதைப் புரிந்து கொள்ளுவதற்கு சலவைத் தொழிலாளி துணியை வெளுப்பதற்காக, அந்தத் துணியை என்ன பாடுபடுத்துகிறார் என்பதைப் பார்த்தாலே போதும்.

சலவைத் தொழிலாளியிடம் நாம் கொடுக்கும் துணியை சலவைத் தொழிலாளி என்ன செய்கிறார்?

நாம் கொடுத்தத் துணியை மடித்து, அதில் கொஞ்சம் வாசனைத் தைலத்தைத் தெளித்து, அதன்மீது மலர்களை வைத்தா நம்மிடம் கொடுக்கிறார்? இல்லை.

முதலில் நாம் கொடுத்த துணியைக் கொதிக்கும் தண்ணீரில் போடுகிறார். அதன்மீது சோப்புத் தூளைக் கொட்டுகிறார். துணி கொதிக்கும் சோப்புத் தண்ணீரில் நன்றாக வேகிறது.

கிரியோகம் என்பது தவம் புரிதல், கற்பனை கற்றல், அவற்றால் ஏற்படும் பலன்களைக் கடவுளுக்கே அர்ப்பணம் செய்தல்.

இவற்றையே தவயோகம் என்றும், நவயோகம் என்றும், சிவயோகம் என்றும் சொல்வார்கள்.

உடம்பைத் தூய்மைப்படுத்துவதற்காக எப்படி தவம் செய்வது?

விரதம் இருக்கிறோம். இதனால் வரம்பு கடந்து நம் உடலில் சேர்ந்திருக்கும் கொழுப்புப் பொருள்கள் கரைந்து மறைந்து விடுகின்றன.

அத்துடன் நம் உடலில் நம்மையும் அறியாமல் சேர்ந்து இருக்கும் விஷப் பொருள்களும் வெளியேறுகின்றன.

*தவத்தினால் கண் முதலிய புலன்களிலும் கை முதலிய பொறிகளிலும் படிந்திருந்த அழுக்குகள் அகன்று விடுகின்றன இதனால் ஐந்து புலன்களின் ஆற்றல்களும் ஐந்து பொறிகளின் செயல் திறமைகளும் விரிவடைகின்றன.*

உள்ளத்தைத் தூய்மைப் படுத்துவதற்காக எப்படி தவம் செய்வது?

மனம், மொழி, மெய் இந்த மூன்றிலும் நாம் நினைக்கிற நினைவின் ஆற்றலும், சொல்லுகின்ற ஆற்றலும், செய்கின்ற செயலின் ஆற்றலும் நமக்குத் தெரியாமல் நம் உள்ளே பதிந்து இருக்கின்றன.

இந்தப் பதிவுகளை எல்லாம் உள்ளத்தில் இருந்தும் உடலில் இருந்தும் உயிரில் இருந்தும் விலக்குவதுதான் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் தவம் ஆகும்.

மௌனத்தின் மூலமாகச் சொற்களினால் ஏற்படும் பதிவுகளையும் போக்குகிறோம்.

இதனால் புதிய புதிய உண்மைகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் வளர்கிறது.

"வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல"

என்று மிகத் தெளிவாக விளக்கி இருக்கிறார் வள்ளுவர்.

விருப்பமும் வெறுப்பும் இல்லாதவர்தான் கடவுள்.

அவருடைய திருவடிகளாகிய அறிவையும், அனுபவத்தையும் பெற்றவர்களுக்கு எந்தக் காலத்திலும் எந்த வகையான துன்பங்களும் அவர்கள் உடம்புக்கும் மனதுக்கும் ஏற்படுவதில்லை.

இந்த அனுபவத்தைப் பெற்ற அப்பர் பெருமான்,

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்கிறார்.

மாணிக்கவாசகரே "இன்பம் பெருக்கி இருள் அகற்றி துன்பம் தொடர்பு அறுத்து ஜோதியாய் அன்பு அமைத்து" என்று பாடுகிறார்.

மனதிலே இன்பம் பெருகும்போது மனதைச் சூழ்ந்து இருந்த இருள் அகன்று விடுகிறது.

முன்பு துன்பத்துடன் அதற்கு இருந்த தொடர்பு அறுந்து விடுகிறது.

இப்போது உயிர்க்குலத்தை எல்லாம் நேசித்து, அவற்றுக்குத் தொண்டு செய்யும் அருள்பணி மட்டும் கலங்கரைவிளக்கம்போல் உயர்ந்து எல்லாருக்கும் வழி காண்பித்துக் கொண்டு இருக்கிறது.

மனம் பரிபூரணமாக நிறைவுபெற்று, சிறிதும் சலனமோ, சபலமோ இல்லாமல் தூய்மையுடன் விளங்குகிறது.

தவத்தினால் கண் முதலிய புலன்களிலும், கை முதலிய பொறிகளிலும் படிந்திருந்த அழுக்குகள் அகன்று விடுகின்றன.

இதனால் ஐந்து புலன்களின் ஆற்றல்களும், ஐந்து பொறிகளின் செயல் திறமைகளும் விரிவடைகின்றன.

எங்கோ இருக்கும் பொருள்களையும், அங்கு நடைபெறும் செயல்களையும் நாம் இருக்கும் இடத்தில் இருந்து பார்த்து, தெரிந்து கொள்ளும் ஆற்றல் ஏற்படுகிறது.

இதனால் செய்தற்கு அறிய அரும் செயல்களை, செய்யும் சித்து விளையாடும் சக்தியும் ஏற்படுகிறது.

இதைத்தான்–"விளையாட்டு என்பது ஞானம் விளையும் விளையாட்டு" என்று ஞான சித்தர்கள் சொல்லுகிறார்கள். தவம் என்பதற்கு உருவம் உண்டா? உண்டு.

அது செய்ய முடியாதவற்றை எல்லாம் செய்து முடிப்பது. பொறுக்க முடியாத துன்பங்களை எல்லாம் பொறுத்துக் கொள்வது.

இதுதான் தவத்தின் உருவமாகும். நியமத்தின் உருவமும் இதுதான்.

*(நன்றி : சக்தி)*

# காளி கலிமாலை



கழகப்புலவர்
*பெ. பொ. சிவசேகரனார்*

அகர வுயிராகி அண்டங்கள் தானாகி அன்பருளச்
சிகர மிசைநிற்குஞ் செய்யாள் சிவானந்தி செம்பவளந்
திகழுந் திருவாயாள் தென்கோணைப் பெருமாட்டி தேவருக்கும்
பகர வொண்ணாப்பத் திரகாளி தன்னை பணிமின்களே 1

முத்தியும் வாழ்வு மளித்திடு வாள்முடை தீர்த்திடுவாள்
புத்தியும ஞானமுந் தந்திடு வாள்வினை போக்கிடுவாள்
இத்தரை மீதினில் எண்ணிய யாவையு மெய்துவிப்பாள்
பத்திர காளித்தா யின்பதம் போற்றிப் பணிமின்களே 2

கல்லாய்க் கிடந்து கலையாய் வெளிவந்து காண்பவர்தம்
எல்லாப் புலனும் ஒடுங்கி நிலைபெற உள்ளகத்தே
பல்லா ருயிரும் பணிந்திடும் பத்திர காளிகையாய்
வல்லாண்மை கொண்ட வராகியை வாழ்த்தி வணங்குதுமே 3

பாடுங் கவிதையிற் காளி பசுந்தேன் பரிமளிக்கச்
சூடுந் தொடையில் சுவையும் பொருளுஞ் சுரந்திடுவாள்
ஆடும் மயில்போல வழகும் நடையு மணிபெறவே
கூடும் படிசெய்வாள் கொற்றவை யாள்மனக் கோயிலிலே 4

பத்திர காளியின் பாதம் பணிந்தேத்தும் பாவிகளும்
இத்தரை மீதினில் தேவரு மெய்தா விருஞ்சிறப்பும்
முத்தியும் எய்துவர் கண்டாய் முதலு முடிவுமிலாச்
சக்தியைப் போற்றுமின் காக்கு மவள்பொற் சரணங்களே 5.

பூரித்து மலர்தூவி அர்ச்சித்து நெஞ்சாரப் பூசைசெய்மின்
ஈரெட்டுத் திக்கும் இடமாகக் கொள்ளும் எழிற்புயத்தில்
தாரிட்டு மாலை தரித்திட்டு கைகள் தனம்பெருக
நேரிட் டருள்செய் வாள்பத் திரகாளி நித்தமுமே 6.

# பத்திரகாளி கோயில் கல்வெட்டுச் சிறப்பு

இராமேஸ்வரத்தில் ஒரு பூசகர் கனவு கண்டார். "கடற்கரை ஓரத்தில் சிமிக்கி செவ்வரத்தை மரத்தின் கீழ் ஒரு கிடாரத்தில் ஒரு காளியும், மணி, தீபங்களும் உண்டு. அதனை வெளிக் கொணர்ந்து அச்சிலைக்கு நித்திய பூஜை செய்" இதுவே அவர் கண்ட கனவு.

திருகோணமலையில் அதே இடத்தில் மண்வெட்டியபோது என்ன அதிசயம் அம்பாள் வெளிப் பட்டாள். அதுவே பத்திரகாளி கோயிலாக அன்று நிலைத்துள்ளது. அந்தப் பூசகர் மதுரை ஐயர் என்று அழைக்கப்பட்டார். அவரது பரம் பரையினரே இக்கோயிலைப் பரி பாலனஞ் செய்து வருகிறார்கள்.

தேவஸ்தான ஆதீன கர்த்தாவாகவிருந்து பிரம்மஸ்ரீ சோமஸ்கந்த ஐயா இக்கோயிலின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். அங்கு பக்திப் பெருக்கை ஏற்படுத் தியவர். அவர் வழியில் அவரது புதல்வன் பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திரக் குருக்கள் அப் பணியைத் தொடர்கிறார்.

திருகோணமலை பத்திரகாளி அம்மன் கோயிலில் காணப்படும் கல்வெட்டு அதன் தொன்மையை, தொன்மைச் சிறப்பினை எடுத்துக் கூறுகிறது.

இக்கோயிலின் திருத்த மண்டபத்தில் வலது புறத் தூணில் இக்கல்வெட்டு காணப்பட்டது.



சாம்பல்தீவு கிராமசபைத் தலைவர் வ.நா. தம்பிராசாவின் முயற்சியினால் கலாநிதி செ. குணசிங்கம் தொல்பொருள் ஆராய்ச்சியினை மேற்கொண்டு சில முடிவுகளை வெளியிட்டுள்ளார். அவை பற்றி சிந்திப்போம்.

எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட தூண் 9 அடி 2 அங்குல நீளம், 9 அங்குல அகலம் உடையது. இத்தூணில் நான்கு பகுதிகளாக எழுத்துக்கள் காணப் படுகின்றன. எழுத்து பொறிக்கப் பட்ட இத்தூணானது இக் கோயிலின் பழைய அழிபாடுகளைச் சேர்ந்த ஒன்றாக இருக்கலாம்.

ஏதோ ஒரு காலப் பகுதியில் இக்கோயிலின் கட்டு வேலைப் பாடுகள் நடை பெற்றுக்

**இ.சோமசுந்தரம்**

கொண்டிருந்த காலத்தில் பிற இடத் திலிருந்து இத்தூண் இங்கு கொண்டு வரப்பட்டுப்பயன் படுத்தப்பட்டு இருக்கலாம்.

தூணின் மூன்று பக்கங் களிலும் கிடைத்த கல் வெட்டுபகுதி முதலாம் இராஜ ராஜனின் மகனான முதலாம் இராஜேந்திரனின் (1012 கி.பி - 1044) மெய்க்கீர்த்திப் பகுதி ஆகும்!!. இவ்வாறு கலாநிதி குணசிங்கம் அவர்கள் கருத்துக் களை வெளி யிட்டுள்ளார்.

இக் கோயிலில் உள்ள தேங்காய் உரிக்கும் கல்லினை உல்லில் என் பார்கள். அதில் காணப்படும் கல்வெட்டில் பின்வருமாறு காணப்படுகிறது.

*"உ. காளி அம்மனுக்கு*
*அயி. செம்புலிங்கம்*
*செய்து கொடுத்தது*
*1878 தை ஆசாரி"*

பழமையாயும், புதுமையாயும் தோன்றிப் பத்திர காளி அம்மாள் திருக் கோணமலை மக்களை இன்னல் சூழ்ந்த காலங் களில் எல்லாம் கண்ணை இமை காப்பது போல் காத்து வருகிறாள். என்னே அவள் அருட் கருணை.



# உடுக்கியவளை மகா கணபதிப்பிள்ளையார்

மு.சவுந்தர சண்முகநாதன்

சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் திருத்தலங்கள் மிக்க வட்டுக்கோட்டை கிராமத்தில் பக்தி நெறியில் திளைக்கும் அடியார்கள் உளர். இக் கிராமத்தின் நடுவே மூளாய் வீதி எனும் சிறு பகுதி உண்டு.

கி.பி. பதினெட்டாம் (18ம்) நூற்றாண்டில் – (1760) முருக உடையார். நாராயண உடையார் ஆகிய சைவ சீலர்கள் வாழ்ந்தனர். நாராயண உடையார் பிள்ளையார் மீது பெரும் பக்தி பூண்டவர் ஆசாரசீலர். வருடம் தோறும் மார்கழி மாத விநாயகர் நோன்பு விரதகாலத்தில் கைதடி என்னும் ஊரில் எழுந்தருளியிருக்கும் வீரகத்திப் பிள்ளையாரிடம் சென்று வழிபடுவதை வழக்கமாகக் கொண்டவர். இவ் ஆலயம் நம் ஊரிலிருந்து ஏறக்குறைய பதினைந்து மைல் தூரத்திலும், கைதடிச் சந்தியிருந்து வடக்கே ஏறக்குறைய ஒரு மைல் தூரத்திலும் இருக்கின்றது. உடையார்கள் குடும்பத்துக்குச் சொந்தமான இக் கோயிலில் இன்றும் அவர்கள் பரம்பரையினரே அறங்காவலர்களாக இருக்கின்றனர்.

சிறந்த போக்கு வரத்து வசதி இல்லாத அக்காலத்தில் எண்பது வயது முதிர்ச்சியையும் பொருட்படுத்தாது, தள்ளாத வயதிலும் விநாயகரைத் தொழ விரும்பினராய், கால்நடையாக வழக்கம் போல் நடந்து சென்று விநாயகரை வழிபட்டுத் திரும்பினார். திரும்பி வரும் பொழுது சங்கரத்தை என்னும் ஊரிலுள்ள வழுக்கையாற்றுப் பிரதேசத்தைத் தாண்டியுள்ள நவாலி என்னும் ஊர் ஆரம்பிக்கும் இடத்தை வந்தடைந்தார்.

உடலின் தளர்வினால், களைப்படைந்து அவ்விடத்தில் உள்ள களையோடை கண்ணகை அம்மன் கோயில் வாசலில் வீழ்ந்து விட்டார். அவர் எழுந்து அம்மன் கோயிலில் இருந்த பொழுது அவரை அறியாமலே நித்திரையில் ஆழ்ந்து விட்டார்.

அச்சமயம் அவரின் கனவில் பிள்ளையார் தோன்றி "நீர் இனிமேல் கைதடிக்கு வரவேண்டாம். உமது பாட்டனாரின் பெட்டகத்தில் நான் இருக்கிறேன். என்னை எடுத்து கோயில் அமைத்து அங்கேயே விரதம் நோற்று வணங்கிடுவாய்" என்று அருள் மொழிந்தார். கனவில் இருந்து விழித்த அடியார் பிள்ளையாரின் கட்டளையை நினைந்து நெஞ்சுருகி இறைவன் கட்டளைப்படி வீடு திரும்பினார். ஆண்டவர் சொல்லிய செய்தியை உறவினருக்கு அறிவித்தார்.

அவர்கள் சூழ பெட்டகத்தைத் திறந்து பார்த்த பொழுது, அங்கு பட்டுச் சேலையாற் சுற்றப்பட்ட சந்தன மரத்தாலான பிள்ளையாரின் திரு உருவம் காணப்பட்டது. எல்லோரும் பக்திப் பரவசமடைந்து கணேசனைத் தொழுது பரமானந்தமுற்றனர். ஆலயம் அமைத்து ஆனைமுகன் திருவுருவை எழுந்தருளிவித்து வழிபடுவதற்கு ஏற்ற திருத்தலம் ஏதெனத் தெரியாது தவித்த உடையார். இறைவனைப் பணிந்து நின்றார்.

இப்பொழுது கோயில் அமைந்துள்ள உடுக்கியவளையில் அக்காலத்தில் பெரிய மாமரம் ஒன்று இருந்தது. அம் மரத்தடியில் வருடம் தோறும் நாராயண உடையார் இறவைனுக்குப் பொங்கலிட்டு பூசை செய்து வழிபடுவது வழக்கம். வழக்கம் போல் பொங்கலுடன் கனி, கிழங்குகள் படைப்பதற்கு பழங்களில் மாம்பழங்கள் ஓரிடமும் கிடைக்கவில்லை. படையல் படைத்து பூசையின் பொழுது மாம்பழம் இல்லையேயென மிக மனம் வருந்தி இறைவனைத் தியானித்தார்.



அப்பொழுது பிஞ்சோ, காயோ, கனியோ இல்லாத அந்த மரத்திலிருந்து அழகிய நறுஞ்சுவைமிக்க மாங்கனி விழுந்தது. இவ்வதிசயக் காட்சியைக் கண்ட உடையாரும்

அடியார்களும் இறைவன் திருவருளை நினைந்து வியந்து பக்திப் பரவசத்துடன் வழிபட்டனர். ஆண்டவன் திருக்குறிப்பினால் உணர்த்திய உடுக்கியவளையே கோயில் அமைக்க ஏற்ற திருத்தலம் என்று எல்லோரும் உணர்ந்தனர்.

கி.பி. 1840ம் ஆண்டு, அவ்விடத்தில் பிராமணர்கள், பெரியோர்கள் வழிகாட்டலில், இறைவன் திருவருளில் ஆலயம் அமைத்து மூலவருக்கு மகா கணபதிப் பிள்ளையார் என நாமம் சூட்டி வழிபடுவாராயினர். அப்பொழுது அக்கோயில் பனை மரத்தாலும் ஓலையாலும் அமைக்கப்பட்டது. பிள்ளையாருக்கு பூசை செய்ய கறுவல் பூசாரி, சிவலைப் பூசாரி ஆகிய நாராயண உடையாரின் சகோதரர்கள், பூசாரிமரமாக இருந்து பூசைகளை நடத்தி வரலாயினர். தற்பொழுது பிராமணக் குருக்களே பூசை செய்கிறார்கள்.

பின்னர் 1860ம் ஆண்டில் சிறப்பாகக் கோயில் திருத்திக் கட்டப் பட்டது. இக் காலத்தில் நாராயண உடையாரின் பேரன் மார்க் கண்டு அவர்கள் கோயிற் பரி பாலகராகக் கடமை யாற்றினார். அதனைத் தொடர்ந்து 1934ம் ஆண்டு கோயில் வைரக் கற்களாற் திருத்தி அமைக்




அறங்காவலர்
சி.கனகசபாபதி

கப்பட்டது. இவ் ஆண்டுக்கு முன் தொடக்கம் பரமானந்த பிள்ளை, சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள் அறங்கா வலர்களாகப் பொறுப் பேற்றுத் தன் வாழ்நாள் முழுதும் கோயில் தொண்டில் ஈடுபட்டார்.

ஏறக்குறைய 1969ம் ஆண்டு தொடக்கம் ஆலயத்தின் முதற் பூசாரிகளில் ஒருவரான சிவலைப் பூசாரியின் வழித்தோன்றலான சிவகுருநாதன் கனகசபாபதி அறங்காவலராகப் பொறுப்பேற்று இன்று வரை ஆலயத்தின் வளர்ச்சிக்குத் தன்னையே அர்ப்பணித்துள்ளார். 1980ம் ஆண்டு மீண்டும் புணருத்தாரணம் நடை பெற்றது. தெற்கு வாசல் மண்டபம், கட்டப்பட்டும், கோயிலில் பல திருப்பணிகள் நடைபெற்றன. புதிதாக வைரவரின் திருச் சொரூபம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இப்புணருத்தாரணம் 1992ம் ஆண்டு முடிவுறப் பங்குனித்திங்கள் 7ம் நாள் (20-03-1992) வெள்ளிக்கிழமை மகா கும்பாபிஷேகம் பிள்ளையார் திருவருளால் இனிது நிறைவேறியுள்ளது.

உடுக்கியவளை ஆலயம் வட்டுக்கோட்டையிலுள்ள மாவடிச்சந்தியில் மேற்கு திசையில் பிரிந்து செல்லும் மூளாய் வீதியில் (1,4) மைல் தூரத்தில் வீதியிலிருந்து ஐம்பது (50) யார் உட்புறம் அமைந்துள்ளது. இக்கோயிலின் அருகில் வடக்குத் திசையில் தெக்கணப்பாய்ப் பதியில் 13ம் நூற்றாண்டைச் சார்ந்த கண்ணகி (மாதா) கோயிலும் (தற்பொழுது கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங் கேஸ்வரர் கோயில்), மங்களாம்பிகா சமேத மகாலிங்கேஸ்வரர் கோயிலும் கிழக்குத் திசையில் அடைக்கலம் தோட்டப்பகுதியிற் கந்தசாமி கோயிலும், தென் திசையில் மகாகாளி அம்பாள் கோயிலும் சற்று தூரத்தில் பங்குருவைரவர்,




பிட்டியம்பதி பத்திரகாளி சமேத வீரபத்திரர் கோயிலும் (பதிரகாளி கோயில்) உள்ளன.

இத்தகைய தெய்வீகச் சூழலில் உடுக்கியவளைப் பதியில் ஓங்கார ரூபனாக, அன்பு மயமாக மகா கணபதிப்பிள்ளையார் எழுந்தருளி, அடியார்களை ஈர்த்து, வினைகளின் வித்துக்களை நீக்கி, ஞான ஒளியைக் கொடுத்து அருள் பாலிக்கின்றார்.


MANO TRADERS
REFINED PURE
GINGELLY OIL
விளக்கிய சுத்தமான
நல்லெண்ணெய்
M.Selvanayagam
155-17/ Messenger
Street, Colombo-12
Tel: 449233

# நாகம் பூஜித்த நயினை நாகபூஷணி அம்பாள்



ஆதியில் நாகம் பூஜித்து வழிபாடு இய்ற்றியமையால் நாக பூஷணி என பெயர் பெற்று நயினையம்பதியில் எழுந்தருளி, அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகி, அம்பாளின் அருளாசி இத்தீவக மக்களுக்கு மட்டு மல்லாது உலகெங்கும் இன்று பரந்துபட்டு வாழும் சைவ மக்கள் யாவரினது உள்ளங்களிலும் நிறைந்து வேண்டுவார் வேண்டும் வரம் ஈந்து அருள் கூருகின்றாள் என்பது அன்னையின் அருள் பெற்று உய்ந்த பல கோடி மக்களின் வாயிலாக, அறிய முடிகிறது.

அந்நியர் ஆட்சியின் அழிவு மிக்க அட்டூழியங்களால் ஆலயம் முற்றாக அழிக்கப்பட்டு ஆலய அர்ச்சகர் ஒருவரால் அம்பாள் ஆதியில் காப்பாற்றப்பட்டு அவளருளாலே மீண்டும் திருக்கோயிலாக வளர்ச்சி பெற்றது. ஆழிமிசை மண்மேட்டில் அமர்ந்திருக்கும் ஆலயம் இயற்கையின், எழிற் பொலிவால் ஈடில்லா காட்சி அளித்து, கிழக்கு நோக்கிய கோபுரவாயில் நேரே அலைகடலை பார்த்த வண்ணமிருக்கும் அமைப்பானது நயினைக் கென்றே கொடுக்கப் பட்ட நற்றவத் தோற்றம்.



நயினை
சோமசுந்தரம்
பாஸ்கரன்

"சக்தி சக்தி சக்தி என்று சொல்லி- அவள் சந்நிதியிலே தொழுது நில்லு" என்று அன்னையின் திருமுன்பு எம்மை ஆற்றுப்படுத்தியுள்ளார். பாரதியார் சொற்களால் வர்ணிக்க முடியாத அன்னையின் தோற்றத்தையும் தேஜோ மயத்தையும் அருள் ஒழுகும் வதனத்தையும் அனுபவித்தால் "மனிதப் பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே' என்று மனத்தில் எழும். அன்னையின் அருளாட்சியால் பல அற்பு தங்கள் நிகழ்ந்திருக்கின்றன. உலகுக்கும் அம்பிகையாய் அன்னை நயினை ஸ்ரீ நாக பூஷணி அம்பாள் விளங்குகிறாள். கண்ஒளி இழந்தோருக்கும் கர்ம நோயுற்றோருக்கும் நொந்து புலம்புவோருக்கும் எண்ணிலாத துன்பத்தவர்க்கும் புனர்வாழ்வு ஈயும் திண்மை தேவியின் அருள் அன்னையின் அடிய வர்களுக்கு செம்மையும், வண்மையும், வாய்க்க, நயினை நாக ராஜேஸ்வரி, ஸ்ரீ நாக பூஷணி அம்பாள் அருள் பாலிப்பாளாக!

முத்துங் கொழிக்கும் கடல் சூழ் நயினை முதுபதிக்கண்
நித்தங் கலங்கள் இவர்ந்தேறி வந்திடும் நின்னடியார்
சித்தம் தெளிவித்துத் துயர் போக்கி, திருகுமனப்
பித்தும் தவிர்த்திடும் தாயே நயினை பிராட்டியே!

# இங்கிதம் தெரிந்தவர்

வே. வரதசுந்தரம்



காந்தி அடிகள் பிரித்தானிய அரசுடன் பேச்சு வார்த்தைக்காக இங்கிலாந்து சென்றிருந்த வேளை அவருக்கு பிரபல ஹோட்டலில் தங்க ஏற்பாடு செய்யப்பட விருந்தது. இருப்பினும் பிரித்தானியாவில் தொழிலாளர்கள் பெருமளவில் வசிக்கும் பர்மிங்காம் பகுதியில் தங்கவே காந்தி அடிகள் விரும்பினார். அதிகாலை அவர் உலாவச் செல்லும்போது தொழிலாளர்கள், குழந்தைகள் அவரைச் சூழ்ந்து கொள்வார்கள்.

பேச்சுவார்த்தை முடியுந்தறுவாயில் இந்தியப் பிரதிநிதிகளுக்கு பிரித்தானிய அரண்மனையில் விருந்து கொடுக்க ஏற்பாடானது. இந்தியப் பிரதிநிதிகளுக்கு அழைப்பு அனுப்பும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அத்தகைய அழைப்பில் விருந்தினர்கள் அணிய வேண்டிய உடைபற்றிய குறிப்பும் இடம்பெறுவது மரபு.

அரண்மனை விருந்துகள் என்றால் கோட், சூட், டை என்று ஆடம்பர உடைகள் வலியுறுத்தப் படுவதுண்டு. பிரித்தானிய மன்னரின் செயலாளருக் கோ பெரிய பிரச்சினை உருவானது. இவ்வாறு உடைகளை வலியுறுத் தினால் காந்தி அடிகள் அழைப்பை ஏற்கமாட்டார். அதேவேளை இம்மரபினைத் தளர்த்தினால் மன்னர் கொதித் தெழுவார். இப்படி ஒரு இக்கட்டான நிலை.

செயலாளர் மன்னரை அணுகி நிலைமையை நாசூக்காக எடுத்துச் சொன்னார்.

"என்னே அந்தப் பக்கிரி அரை நிர்வாணமாக அரண்மனை விருந்தாளியாக வருவதா?" என்று ஆத்திரப்பட்டார் மன்னர். இறுதியில் செயலாளர் நயமாக எடுத்துரைத்து மன்னரை இசையச் செய்தார்.

விருந்து முடிந்து விருந்தினரை மன்னருக்கு அறிமுகம் செய்து வைக்கும் கட்டம். காந்தி அடிகளை அறிமுகம் செய்து வைக்கும்போது மன்னர் எப்படி எதிரொலிப்பார், எரிந்து வீழ்வாரா என்று செயலாளருக்கு ஒரே பதட்டம்.

காந்தி அடிகளார் மன்னருக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுகிறார். முகத்தில் சீற்றத்துடன் மன்னர் சொன்னார் "மிஸ்டர் காந்தி ! உமது ஆட்கள் எனது உத்தி யோகத்தர்களைத் தாக்குவதை, கொலை செய்வதை நான் பொறு மையுடன் பார்த்துக் கொண்டிருக்க மாட் டேன். பிரித்தானிய சாம்ராஜ்யத்தை கலைக்க நான் மன்னனாக வில்லை. இதை மனதில் இருத்திக் கொள்ளவும்" இப்படி எச்சரித்தார்". அவர் மன்னனின் நடத்தையைக் கண்ட செயலாளர் என்ன நடக்குமோ என்று ஏங்கிப்போனார்.



ஆனால் காந்தி அடிகளோ தனக்கே உரிய சாந்தத்துடன், தனக்கே உரிய புன்முறுவலுடன் கூறிய வார்த்தைகள் எம்மை வியப்படையச் செய்யும்.

"மாண்புமிகு மன்னரின் விருந்தினனாக வந்து அரண்மனை விருந்தினை அருந்தியுள்ள இவ்வேளையில் சர்ச்சைக்குரிய விடயங்கள் பற்றிப் பேச நான் விரும்பவில்லை அது முறையு மில்லை" இப்படிச் சொன்னார் காந்தி அடிகள்.


இதைக் கண்டு, கேட்ட செயலாளர் கூறியதோ ஒரு நயவுரை. "உலகியலில் திளைக்கும் மன்னருக்கோ சமூக இங்கிதம் தெரியவில்லை. ஆனால் ஆன்மீக வாழ்வில் ஈடுபடும் காந்தியாருக்கு இவ்வண்ணம் இங்கிதம் எங்கிருந்து வந்ததென நமக்குப் புரியவில்லை", என்று வியந்தார் மன்னரின் செயலாளர்.

இத்தகைய இனிய இங்கிதத்தை நான் திரு கோணமலை காந்தி மாஸ்டரிடம், திரு. பொ. கந்தையா அவர்களிடம் காண்கிறேன். வாழ்த்துபவர்கள், வைபவர்கள் என்று யார் மாட்டும் "ஆனந்தம், ஆனந்தம்" என்று சொல்லும் இங்கிதம் என்னே!

அத்தகைய பெரியாருக்கு கொழும்பு கம்பன் கழகம் "மூதறிஞர் விருது" வழங்கிக் கொழும்பில் கௌர வித்தது சாலப் பொருந்தும்.

# ஆரோக்கிய வாழ்வு தரும் யோகம்

கா.சந்திரலிங்கம்
(பங்களூர் விவேகானந்த கேந்திர யோக ஆராய்ச்சி நிறுவனத்தில் யோகப் பயிற்சி பெற்றவர்)



யோகம் ஒரு பூரண விஞ்ஞானமாகும் இது மனிதனை எல்லாவகையிலும் முழுமையடையச் செய்து அவனது வாழ்வை உயர்த்துகின்றது. மனிதனை மிருக நிலையிலிருந்து சாதாரனமனித நிலைக்குக் கொண்டு வந்து மிக உயர்ந்த நிலையில் ஆதிமானுடன் என்று சொல்லக்கூடிய அளவுக்குக் கொண்டு வருவதுடன் தெய்வத்தன்மையுடையவனாக மாற்றுகின்றது.

யோகம் மனிதனுக்கும் இறைவனுக்கும் ஒரு தொடர்பாக விளங்குகின்றது. மனதை உறுதியான நிலையில் வைப்பதற்கு யோகம் உதவுகின்றது.

## யோகத்தின் வகைகளும் படிகளும்

பொதுவாக கர்மயோகம், பக்தியோகம், இராஜயோகம், ஞானயோகம் என நான்கு வகையான யோகங்கள் காணப்படுகின்றன. யோகத்தில் எட்டுப்படிகள் உள்ளன அவை.

| | |
|---|---|
| 1. இமயம் | – அகிம்சை |
| 2. நியமம் | – உடலால்,உள்ளத்தால் தூய்மையாக இருத்தல் |
| 3. ஆசனம் | – ஆரோக்கியத்திற்கான இருக்கைகள் |
| 4. பிராணயாமம் | – மூச்சோடு சம்பந்தப்பட்ட நுட்பமான சில பயிற்சிகள் |
| 5. பிரத்தியாகாரம் | – மனத்தை வேறு பொருட் களில் செல்லாது தடுத்தல் |
| 6. தாரணை | – மனத்தை ஒரு நிலைப் படுத்தல் |
| 7. தியானம் | – ஒரே விசயத்தைத் சிந்தித்தல் |
| 8. சமாதி | – ஐக்கியமடைதல் |

## யோகத்தை யார் செய்ய வேண்டும்

யோகம் என்றதும் காட்டில் தவம் செய்யும் யோகிகள் மாத்திரம் செய்ய வேண்டியது. சாதாரண மானவர்களால் செய்யமுடியாதது செய்யக் கூடாதது. மூச்சை அடக்கி வைப்பது, குண்டலினி சக்தியை உண்டாக்குவது, தலைகீழாக பொருட்களை எடுத்துக்காட்டுவது என்றெல்லாம் நினைக்கிறார்கள்.

உண்மையில் யோகம் மிக விசாலமானது பரந்து பட்டது எவ்வளவோ பல நுணுக்கமான, விஞ்ஞானத்துக்கு அப்பாற்பட்ட பல விடயங்களை உள்ளடக்கியுள்ளது. இருப்பினும் எல்லோரும் செய்யக் கூடியதாக மனிதவாழ்க்கைக்குத் துணை நிற்கக் கூடியதாக பல்வேறுபட்ட விடயங்கள் யோகத்தில் நிரம்பியிருக்கின்றன.

சிறுபிள்ளைகள் முதல் வயது வந்தவர் வரைக்கும் கடைப்பிடிக்கக் கூடிய பல்வேறு விடயங்கள் யோகத்திலே சொல்லப் பட்டிருக்கின்றன. சிலர் யோகம் இந்து மதத்தவர்களுக்கு மட்டும் உரியது என நினைத்து கொள் கின்றார்கள். உண்மையில் யோகம் ஒரு சமயத்துக்கு மட்டும் வரையறுத்துக் கூறப்பட்டிருக்கவில்லை அனைவரும் இதனைச் செய்யலாம்.

## யோகம் ஏன் செய்யவேண்டும்

யோகம் மனிதனிடத்து அன்பு, ஒற்றுமை, திறமை, ஒருங்கிணைப்பு, பேரானந்தம், ஆரோக்கியம், மகிழ்ச்சி போன்றவற்றை உருவாக்குகின்றது. எப்பொழுதும் கவலையற்று இருக்கச் செய்கின்றது. சகிப்புத்தன்மையை ஏற்படுத்துகின்றது, சாதி, மத பேதத்தை அகற்றுகின்றது.

யோகம் செய்வதால் அமைதி, நளினம், சக்தியின் சேமிப்பு, திறன் என்பன ஏற்படுவதுடன், முகத்தில் மலர்ச்சி, தேஜஸ் தன்மை ஏற்படுகின்றன.

தற்போதைய உலகம் நெருக்கடியான உலகம், வேகமான உலகம், மாறிவரும் உலகுக்கு முகம் கொடுக்கும் மனிதன் பல்வேறு பிரச்சனைகளுக்கு உள்ளாகின்றான். இதனால் அவனுக்கு மன அழுத்தம் உண்டாகின்றது. மன அழுத்தம் பல்வேறு நோய்கள் அஸ்மா, நீரழிவு, இரத்த அழுத்தம், மாரடைப்பு,

போன்றவை உண்டாவதற்கும் இது காரணமாக அமையலாம். எனவே பல்வேறு நோய்களிலுமிருந்து எங்களைக்காப்பாற்ற, நாங்கள் ஆரோக்கியமாக வாழ, எப்பொழுதும் மகிழ்ச்சிகரமாக மனத்தூய்மையுடன் இருக்க யோகம் எங்களுக்கு உதவியளிக்கின்றது.

எனவே யோகத்தின் படிகளாக விளங்கும் யோகாசனம், தியானம் செய்வதினால் பல்வேறு நோய்களினின்று நீங்கி ஆரோக்கியமாக வாழ்வதுடன் அளப்பெரிய நன்மைகளையும் பெறலாம்.

## யோகாசனம் செய்வதற்கு முன் அவதானிக்க வேண்டிய சில விடயங்கள்

1. ஆசனம் செய்யும் இடம் தூய்மையான காற்றுள்ள இடமாக இருத்தல் வேண்டும்.
2. மலர்ந்த முகத்துடன், விருப்புடன், மனத்தை ஆசனத்தில் செலுத்தியும் ஆசனம் செய்யவும். எந்த ஆசனமும் கஸ்டப்பட்டு செய்யக்கூடாது.
3. உடற்பயிற்சி, ஆசனம் இரண்டும் ஒருமித்து செய்யக் கூடாது. தளர்த்தும் பயிற்சிகள் செய்தால் நன்கு ஓய்வெடுத்த பின் ஆசனம் செய்யலாம்.
4. உணவு உண்டு குறைந்தது 4 மணித்தியாலங்களின் பின்னும் சிற்றுண்டி ஆகின 2 மணித்தியாலங்கள் கழித்த பின்னும் ஆசனங்கள் செய்யலாம்.
5. ஆசனம் செய்வதற்கு 1/2 மணித்தியாலங்களுக்கு முன் குளிக்கலாம். அல்லது 1/2 மணித்தியாலங்கள் கழிந்த பின் குளிக்கலாம்.
6. பெண்கள் மாதவிலக்கு நாட்களில் ஆசனம் செய்வதை தவிர்க்கவும். கர்ப்பிணிப் பெண்கள் 8 மாதங்கள் வரை ஆசனங்கள் செய்வதைத் தவிர்க்கவும் 8 மாதத்தின் பின் இலகுவான ஆசனங்கள் சில வற்றைச் செய்யலாம்
7. ஆசனம் செய்தபின் உடலில் புத்துணர்ச்சியும், புதுத்தென்பும் பெருகுவதோடு மனம் அமைதியாக இருக்கும்.

## யோகாசனம் செய்ய ஆரம்பிப்பது எவ்வாறு?

ஆசனம் செய்யும் போது முதற்கண் நாம் இறைவனை நினைத்து ஆரம்பிப்பதோடு மட்டுமன்றி ஆசனத்தை உலகத்திற்கு சிறப்பாக அளித்த பதஞ்சலி முனிவருக்கு நன்றி கூறுவது பொருத்தமுடையதாக இருக்கும். பதஞ்சலி முனிவர் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்ததாகச் சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சில ஆய்வாளர்கள் இவரது காலம் 2500 ஆண்டுகளுக்கு முந்தியதாக இருக்கலாம் எனவும் கூறுகின்றார்கள்.


## இறைவனை ஏன் பிரார்த்திக்க வேண்டும்.

எங்கும் பரிபூரணமாக நிறைந்திருக்கும் இறைவனை நாம் பிரார்த்திப்பதால் எம்மனம் ஒன்று படுகின்றது. யோகாசனம் செய்வதற்கான சூழ்நிலை உருவாகின்றது, இறைவனின் அருள் கிடைக்கின்றது.மனதினை விசாலமடையச் செய்கின்றது.

இலகுவான இரண்டு பிராத்தனைகள் கீழே தரப்பட்டுள்ளன.

## பிரார்த்தனை I

*"ஓத் ஸஹனாவவது! ஸஹநௌ புனக்து!*
*ஸ்ஹவீர்யம் கரவாவஹை! தேஜஸ் வினாவதீதமஸ்து*
*மாவித்விஷாவஹை! ஓம் சாந்தி: சாந்தி : சாந்தி*



இதன் பொருள் :

அவர் நம்மிருவரையும் காத்தருளட்டும், அவர் நம்மிருவருக்கும் புஷ்டி அளிக்கட்டும். பெரும் சக்தியுடன் நாம் இருவரும் இணைந்து பணியாற்றுவோம். நம் கல்வி ஒளியூட்டுவதாகவும் பயனுள்ளதாகவும் அமையட்டும். நாம் ஒருவரையொருவர் வெறுக்காதிருப்போம். ஓம் சாந்தி. சாந்தி. சாந்தி

## பிரார்த்தனை II

*"யோகேன சித்தஸ்ய பதேனவாசா மலம் சரீரஸ்யச வைத்யகேன .*
*யோபாகரோத்தம் ப்ரவரம்முனினாம் பதஞ்சலிம் ப்ராஞ்ஜலிரான தோஸ்மி"*

இதன் பொருள் :

நான் கரங்குவித்து பதஞ்சலியை வணங்குகிறேன். அவர் முனிவர்களுள் புகழ் பெற்றவர். மனத்தின் அழுக்கினை யோக சாத்திரத்தினாலும், வாக்கினை இலக்கண சாத்திரத்தினாலும் உடம்பினை ஆயுர்வேதத்தினாலும் அவர் தூய்மைப்படுத்தினார்.

ஆசனத்தின் முழுப்பயனையும் பெறுவதற்கு பிரார்த்தனை துணை நிற்கின்றது.

தொடரும்............

## சந்நிதி சோதிடம்



*அன்புக்குரிய வாசகர்களே!*

ஒன்பதாண்டு காலம் ரிஷிகேசத்தில் வாழ்ந்து யோக வாழ்க்கையில் ஈடுபட்டவரும், "விக்னேஸ்" என்ற பெயரில் பிரபல்யமடைந்துள்ள சோதிட ஆய்வாளரும், "வான்மதி" சோதிட சஞ்சிகை ஆசிரியருமான திரு.எஸ்.விக்னேஸ்வரன் அவர்கள் சந்நிதி வாசகர்களின் சோதிடம் தொடர்பான சந்தேகங்களுக்கு அல்லது பிரச்சினைகளுக்கு விளக்கம் அளிக்க முன்வந்துள்ளார்.

சந்நிதி அன்னாருக்கு தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

வாசகர்கள் தமது பிரச்சினையைச் சுருக்கமாக ஒரு தாளில் தெளிவாக எழுதி, பின்வரும் கூப்பனை நிரப்பி, சுயவிலாசமும் முத்திரையும் இடப்பட்ட கடித உறையுடன் எமக்கு அனுப்பு வைக்கவும்.

*அனுப்ப வேண்டிய முகவரி:*
ஆசிரியர்
"சந்நிதி"
39, 36 வது ஒழுங்கை
கொழும்பு-06

---

சந்நிதி சோதிடம்
ஆசிரியர்
"சந்நிதி"

முழுப் பெயர்:..................................................

பிறந்த திகதி:........................ நேரம்:....................

விலாசம்:..........................................................

..........................................................................

இத்துடன் இணைத்துள்ள எனது பிரச்சினைக்கு சோதிட ஆய்வாளர் "விக்னேஸ்" அவர்களின் பதிலை எதிர்பார்க்கிறேன்.

திகதி : ....................... ...........................
கையொப்பம்

# இளவரசி டயானாவின் ஜாதகம் கூறுவது என்ன?

**(விக்னேஸ்)**

வானத்துக் கோள்களின் அசைவினால் வையைத்தில் ஏற்படும் தாக்கங்களை ஒவ்வொரு ஜீவராசியினாலும் உணரக் கூடியதாக உளது. கிரகங்களின் வெவ்வேறு நிலைகளுக்கு இடையே ஏற்படுகின்ற கிரக பார்வை, சேர்க்கை என்பனவற்றிற்கும் பூமியில் நிகழும் சம்பவங்களுக்கும் தொடர்பு இருக்கின்றன. கிரகங்களின் அசைவினால் ஏற்படும் வெவ்வேறு நிலைகளின் பின்னணியில் ஒருவரது வாழ்வின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான காலப்பகுதியில் ஏற்படும் நிகழ்வுகளை முன்கூட்டியே அறிய உதவுவது ஜோதிட சாத்திரம்.

கிரகங்கள் அற்ற நிலையில் பூமியில் வாழ்வு என்ற ஒன்றை கற்பனை செய்து பார்க்க முடியாது. சூரியன் இல்லாத உலகில் கண்ணிருந்தும் குருடாகவே வாழ வேண்டியிருக்கும். கிரகங்களிற்கும் நமது வாழ்விற்கும் இடையேயுள்ள தொடர்பு நூலிற்கும் அந்நூலினால் நெய்யப்பட்ட சேலைக்கும் இடையேயுள்ள தொடர்பைப் போன்றது.

உலகில் தோன்றுகின்ற ஜீவராசிகள் ஒவ்வொன்றிற்கும் பிறக்கும் நேரத்திற்கு அமைய ஒவ்வொரு கிரகத்தின் ஆதிபத்யம் ஏற்படுகின்றது. ஜோதிட சாஸ்திரத்தில் சூரியன் முதல் சனீஸ்வரன் வரையிலான ஏழு கிரகங்களிற்கும் இராசி அதிபதி என்ற நிலை அமைகின்றது. கன்னி இலக்கினம் உதயமாகின்ற வேளையில் ஜனனமான ஒருவருக்கு புதன் இலக்கினாதிபதி ஆகின்றார். இதேபோல், விருச்சிக இலக்கினம் உதயமாகின்ற வேளையில் ஜனனமான ஒருவருக்கு செவ்வாய் கிரகத்தின் இலக்கின ஆதிபத்யம் ஏற்படுகின்றது. செவ்வாய்க் கிரகத்தை இலக்கினாதிபதியாக உடையவர்க்கு கிரக கோசாரத்தில் சுப கிரகங்களின் பார்வை, சேர்க்கை செவ்வாய் கிரகத்தின் மீது ஏற்படும் திகதிகளில் சுப பலன்களும், இவ்வாறே அசுப கிரகங்களின் பார்வை ஏற்படுகின்ற நாட்களில் தீயபலன்களும் நிகழும். ஒருவர் மரணமடையும் நாளில் இவரது இலக்கினாதிபதி பாவக் கிரகங்களின் சேர்க்கை அல்லது பார்வைக்கு உட்படுவதை அவதானிக்கக் கூடியதாக உளது.

உலகின் பல பாகங்களிலும் உள்ள மக்களின் நினைவை விட்டு நீங்காது இருப்பவர் மறைந்த் பிரித்தானிய இளவரசி டயானா. இவரது திருமணத்தை 7500 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொலைக் காட்சிகளில் கண்டு களித்தனர். இதே போல் இவரது எதிர்பாராத மரணத்தின் இறுதி ஊர்வலத்தை கவலையுடன் கண்ணுற்றோர் பலகோடி, அண்டத்துக் கோள்கள் இவரது ஜாதகத்தில் கூறுவது என்ன?

இளவரசி டயானா 1ம் திகதி யூலை மாதம் 1961ம் ஆண்டு British Summer நேரப்படி இரவு 19 மணி 45 நிமிடத்தில் பிறந்துள்ளார். இவர் பெற்றோருக்கு மூன்றாவது குழந்தையாக பிறந்தவேளையில் விருச்சிக இலக்கிணம் உதயமாகிறது.

இவர் இலக்கினாதிபதி செவ்வாயின் குணாதிசயங்களைக் கொண்டவராகக் காணப்பட்டார். இவரது ஜாதகத்தில் செவ்வாய், இராகுவுடன் சேர்க்கை பெறுவது

அவதானிக்க வேண்டிய ஒன்றாகும். இவர் பிறந்த வேளையில் 71/2 சனீஸ்வரன் காலம் நடைபெற்றதாலும் 4ம் இடத்தில் தாய்க்குரிய காரகன் சந்திரன், கேது உடன் சேர்க்கை பெற்றிருந்ததாலும் டயானா ஸ்பென்சர் 7வயதுக் குழந்தையாக இருக்கும் போதே பெற்றோர்கள் விவாகரத்து செய்து கொண்டார்கள். கும்ப இராசியில் அவிட்ட நட்சத்திரத்தின் 3ம் பாதத்தில் பிறந்த இவர் இளமைக்காலத்திலே வாழ்வின் சோதனைக்கும், வேதனைக்கும் ஆளானார்.

கும்ப இராசியில் பிறந்த மையால் அமைதியான போக்கும், பிறரோடு சேராமல் தனிமையை விரும்புவராகவும் இளமையில் காணப் பட்டார். ஜனன திசையான செவ்வாய் திசையைத் தொடர்ந்து ஜாதகிக்கு இராகு திசை நடைபெற்ற காலம் இவர் கல்வியிலே காலத்தை கழித்தார். இராகு திசை முடிவு வாழ்வில் பெரும் திருப்பத்தையும், அதிர் ஸ்டத்தையும் ஏற்படுத்தியது. இராகு திசை செவ்வாய் புத்தியில் உலகின் பார்வை டயானாவின் பக்கம் திரும்பியது, காரணம் இவருக்கும் இளவரசர் சார்ஸ்சிற்கும் ஏற்பட்டிருக்கும் நெருங்கிய தொடர்பு. இதன் விளைவு 29.07.1981ல் இவர்கள் திருணம் செய்து கொண்டார்கள். இலக்கினத்திற்கு 7ம் அதிபதி இவரது கணவனைக் குறிக்கும் கிரகமான வெள்ளி, 7ம் வீட்டில் ஆட்சி பெற்று சந்திரனிற்கு 7ம் அதிபதியான சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது



இவருக்கு பிரபல்யமான திருமணத்தைக் கைகூட வைத்தது.

இராகு திசையைத் தொடர்ந்து நீசம் பெற்ற யோகக்காரன் மகர வியாழன் திசை 16 வருடங்களுக்கு உரியது ஆரம்பமானது. வியாழன் வக்ர மடைவதால் உச்சக் கிரக பலனையும் நீசபங்க ராஜயோகம் அடைந்த வியாழன் 9ம் அதிபதியான சந்திரனின் திருவோண நட்சத்திரத்தில் அமைந்ததால் வியாழ திசை ஆரம்பத்தில் புகழோடு கூடிய சுபபலன்கள் அதிகரித்தன. வியாழ திசையின் ஆரம்பத்தில் இவருக்கு அரசவாழ்வு ஐஸ்வர்யம், வியாழதிசை வியாழ புத்தியிலும் வியாழ திசை சனி புத்தியிலும் இரண்டு புத்திரர்களுக்கும் தாயானார். நீசமடைந்த கிரகம் வக்ரமடையும் போது உச்ச பலனைக் கொடுப்பார் என்ற ஜோதிட விதி இவர் ஜாதகத்தில் வியாழன் நிலையைக் கொண்டு அறியக் கூடியதாக உளது.

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | வெள் | புத (வ) சூரி |
| சந் கேது | இராசி | | 9 |
| வியா (வ) சனி (வ) | | | செவ் ராகு |
| 2 | இலக் | 12 | 11 |

| | | | |
|---|---|---|---|
| 2 | வியா | ராகு | செவ் |
| இலக் சூரி துலா | நவாம்சம் | | 6 |
| வெள் | | | 7 |
| புதன் | கேது | சந் | 8 |

*செவ்வாய் திசை இருப்பு : வரு 2 மாதம் 7ம் நாள் 15*

இளவரசி டயானாவிற்கு இரண்டாவது 71/2 சனீஸ்வரன் காலம் 90ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஆரம்பமானது. வாழ்வில் சோதனைகளும் ஆரம்பமானது. ஜன்ம இராசியான கும்ப இராசியை சனீஸ்வரன் கடந்து செல்லும் காலம் இவரது தந்தையின் மரணம், திருமண வாழ்வும் கசந்தது. இளவரசர் சார்ள்ஸ்சிடமிருந்து நிரந்தரமான விரிவுக்கான விவாகரத்தும் வியாழ திசை ராகு புத்தியில் கிட்டியது. இவற்றோடு புதிய உறவுகளும், தொடர்புகளும் இவருக்கு ஏற்பட்டன. அடுத்து ஆரம்பமாக உள்ள திசை சனீஸ்வரனிற்குரியது. விதிக்குரிய சனீஸ்வரன் ஆண்டியையும், அரசனையும் விடுவதில்லை. 71/2 சனீஸ்வரனின் பிடியிலிருந்த இளவரசி சனிக்கிழமை பிறந்தவர், சனிக்கிழமை நள்ளிரவு பரிஸில் கார் விபத்தில் சிக்கியவர் 31.08.97 அதிகாலையில் மரணமானார்.

இவரது திருமணத்தையும், மரணத்தின் இறுதி மரியாதையும் பல கோடி மக்கள் கண்ணுற்றனர் இதற்கு 7ம் அதிபதி, 8ம் அதிபதியான முறையே வெள்ளி, புதன் கிரகங்கள் ஆட்சிப் பெற்று இருப்பதே ஜோதிட ரீதியான காரணம். இவரது ஜாதகம் பூரண ஆயுளைக் காட்டுகின்றது இருப்பினும் திடீர் மரணத்திற்கு என்ன காரணம்? இலக்கினாதிபதி செவ்வாய், இராகு உடன் 2 பாகை தூரத்தில் இருந்து கிரக யுத்தத்தில் ஈடுபடுவதேயாகும்.

இவர் மரணத்தின் போது கோசாரத்தில் இலக்கினாதிபதியான செவ்வாய் நவாம்சத்தில் சனீஸ்வரனுடன் சேர்க்கை அடைந்திருந்ததையும் அவதானிக்க கூடியதாக உளது.

இறைவன் அருளாலும், ஜோதிட ஞானத்தாலும் காலத்தை அறிந்து செயல்படுவதால் தீய பலன்களைத் தவிர்த்து சீரிய வாழ்வை அமைத்துக் கொள்ளலாம்.

# திருமண பொருத்தத்தில் வசியம்

திருமணம் நிச்சயிப்பதற்கு ஜாதகப் பொருத்தம் பார்ப்பது மிகவும் முக்கியமானதொன்றாக இந்துக்களிடம் மட்டுமல்லாது மற்ற மதத்தினரிடமும் தற்போது பரவலாக நம்பப் படுகின்றது.

விவாகங்கள் உரிய [illegible] நடைபெறாது தள்ளிப்போவதற்கு கூட இது காரணமாக அமைகிறது. காதல் திருமணங்கள் என்று நடைபெறுவதைவிட பெற்றோரினால் நிச்சயிக்கப்படுபவற்றில் முக்கியமாக வசியப் பொருத்தம் நன்கு அமையவேண்டும். ஏனெனில் இரு வேறுபட்ட சூழலில் பிறந்து வளர்ந்து திருமண பந்தத்தில் இணையும் தம்பதிகள் மனமொத்து சந்தோஷமாக குடும்பம் நடத்துவதற்கு இருவரிடையேயும் அன்பு சினேகம் இருக்க வேண்டும்.

இது பற்றி நான் அறிந்த சிலவற்றை "சந்நிதி" வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன்.

முதலாவதாக ஜாதகப் பொருத்தம் பார்க்கும் போது இருவரினதும் பிறந்தநேரம் இடம் சரியாக எடுக்கப்பட்டு முறையாக கணிக்கப்பட வேண்டும். இருவரினதும் நவகிரக ஜன்ம லக்னம் நவாம்ச லக்னம், சந்திர லக்னம் சுக்கிர லக்னம் என்பன ஒன்றாகவோ அல்லது 7/7 ஆக சம சப்தமாகவோ 5,7,9 எனப்படும் திருகோணத்திலோ, 4, 7, 10 ம் இடம் ஆன கேந்திரமாகவோ இருக்க வேண்டும்.

சமசப்தமாக இருப்பது கூடுதலான வசியமுள்ளதாக கருதப்படுகின்றது.

**திருமதி கலைவாணி இராஜரட்னம்**

இது தவிர பெண்ணின் ஜாதகத்தில் செவ்வாய் இருக்கும் வீட்டில் ஆணின் ஜாதகத்தில் வெள்ளி இருப்பதும் வசியமாகும்.

இரு ஜாதகத்திலும் களஸ்திர அதிபதி ஏழாம் வீட்டு அதிபதி வெள்ளி என்பன சுபகிரக பார்வையுடன் நல்ல நிலையில் இருப்பதும் சந்தோஷமான மனமொத்த சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட திருமணமாக அமைகிறது.



*இந்நாளை அன்புடன் தொடங்கு.*
*இந்நாளை அன்பினால் நிரப்பு*
*இந்நாளை அன்பினில் கழித்திரு*
*இந்நாளை அன்புடன் நிறைவுசெய்*
*இதுவே கடவுளை அடையும் வழி*
*ஏனெனில் அன்பே கடவுள்*

*சாயி பாபா*


**Ganesh Textiles**
**(Private) Limited**
Wholesale & Retail Dealers in Textiles

**81-83 MAIN STREET, COLOBO-11**
**SRI LANKA. PHONE- 325128, 343078**

# இறைவா! எமது தாழ்மையான இரப்பு

**ஆழ்கடலான்**

*"நாம் வலுவிழந்த மனிதர்கள் எங்களால் எந்தச்சுமையைத் தாங்க முடியாதோ அந்தச் சுமையை எங்களுக்குத் தந்தருளாதீர்கள் சுவாமி"*

- ஒரு ஞானி -

நெஞ்சைத் தொடும் பிரார்த்தனைகள் எமது கவசங்கள். பிரார்த்தனை, தியானம், தூய சிந்தனை, நல்ல வாழ்வு முறை, மறந்தும் பிறன்கேடு சூழாமை, பிறர் நல சேவை ஒவ்வொருவரின் உயிர்மையங்கள் எனப் பெரியோர் பேசுகின்றனரே. எல்லார் உள்ளங் களையும் ஒருங்கிணைக்கும் விழுமிய நோக்குகள் இறைவன் சந்நிதான நிவேதனங்களே.

மற்றவர்களுக்காக யார் வேண்டுதல் செய்கிறார்களோ, அவர்களே உண்மையாகப் பிரார்த்தனை செய்கிறார்கள். சுயநலமற்ற பரநலமே இதயநாதம். இறைவனருட் குடைக்கீழ் எல்லோரும் இன்பநிறைவுற்று வாழ்கநிதம்.

இறைவா பொன்னைப், பொருளைப் போகத்தை நாம் இரக்க வில்லை. நாம் நின்னிடம் இரப்பவை அன்பும், அருளும், அமைதியுந்தான்.

நாமோ ஒன்றிற்கும் தகுதி இல்லாதவர்கள். எல்லாத் தகைமைகளும் நின்னிடமே நிரம்பி வழிகின்றன. ஆண்டவனே நீதான் உயர்ந்தவற்றுள் உயர்ந்தவன். நாமோ தாழ்ந்தவற்றுள் தாழ்ந்தவர்கள். எங்களையும் உயர்த்தி உத்தமராக்குங்கள். உண்ணுஞ்சோறும், பருகும் நீரும் போடும் வெற்றிலையும் நின்னதுதான்.

நாங்களோ நின்சவலைக் குழந்தைகள் தாங்களோ கவலை இல்லாத சிவலை எம்மை அப்பி நின்று பேணும் பெற்றோர்கள். அன்னையும் தந்தையும் தாங்கள் தானே. அடிப்பதும் அணைப் பதும் உங்கள் பான்மை. எனவே எம்மைப் புரப்பது தாங்களே. நின்கடன் அடியேங்களைத் தாங்குதல்.

தோன்றாத்துணையாய்த் திகழும் தாங்கள், மானிடர்க்கு மானிடச்சட்டை தாங்கி வந்து அருளுவதாக அருளாளர்கள் பேசுகிறார்களே. உங்கள் வரவை என்றும் விழிப்போடு எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறோம். எமது குற்றங் குறை களைக் குணமாகக் கொண்டு, அவற்றினின்றும் மீட்டு விடுங்கள் ஸ்வாமி கண்ணா ! அவர்கள் பிழை செய்தாலும் அடியார் சொற்களைப் பொறுப்பது பெரியோர் கடமையன்றோ?

சுழக்கு நாக்கொடு புன்கவி சொன்னேன்
சங்கு சக்கரம் ஏந்து கையானே
பிழைப்பர் ஆகிலும் தம் அடியார் சொல்
பொறுப்பது பெரியோர் கடன் அன்றே
விழிக்கும் கண்ணிலேன் நின்கண் மற்றல்லால்
வேறு ஒருவரோடு என்மனம் பற்றாது
உழைக்கு ஓர் புள்ளி மிகை யன்று காண்பாய்
ஊழி ஏழ்உலகு உண்டு உமிழ்ந்தானே
சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோராயிற் பொறுப்பது கடனே

*-(பெரியாழ்வார்)-*

தக்க தலைவனாய், நல்லாசானாய், நண்பனாய், பண்புடைய சேவகனாய் ஞான குருவாய் வந்து நம்மை வழிப்படுத்துங்கள். எங்கள் இருள் சூழ்ந்த வாழ்வை ஒளிமய மாக்குங்கள்.

இவ்வுடலும் உயிரும் தங்களாற் தரப்பட்டவையே. இவ்வுலக வாழ்க்கை நீரோட்டத்திற் தேங்கித் திளைத்து திணறு கின்றோம். எம்மைக் கைதூக்கியாள் கண்கண்ட தெய்வமே! இவ்வுலகில் எவருடைய முகத்திலும் ஒருகவலைக் கோடு தோய்ந்து கிடக்கிறதே ! ஏன் பிரபு ! ஒரு இனந்தெரியாத, தெளிவே இல்லாத அந்தக் குறியீடு என்னவென்பதைத் தாங்கள்தான் அறிவீர்கள்.

வாழ்வு ஒரு சுமையாகி, வழிப்பயணம் ஒரு தொல்லையாகி விட்டதே எமக்கு. வறுமை, வெறுமை, நோய் பிணி, நலிவு மெலிவு, எம்மை வாட்டி வதைக்கின்றன.

# கொற்றவைக்குரிய பாவை நோன்பும் புனித நீராடலும்

சங்க இலக்கியங்களில் கொற்றி, கொற்றவை, சூலி என்னும் பல்வேறு பெயர்களால் கொற்றவை குறிக்கப் படுகிறாள்.

வெற்றித் தெய்வம் என்று பொருள்படும் கொற்றி என்னும் சொல் "கொல்" என்னும் அடிச்சொல்லில் இருந்து தோன்றியது. அச் சொல்லுடன் "ற்றி" என்னும் பெண்பால் ஒருமை விகுதியுஞ் சேர்ந்து "கொற்றி" ஆகியுள்ளது.

கொற்றவை தாய் – வெற்றித் தெய்வம் என்னும் அதே அடியோடு தவ்வை அல்லது அவ்வை என்பதுஞ் சேர்ந்து தோன்றியதாகும் தவ்வை, அவ்வை என்னும் இரண்டு சொற்களும் தாய் என்று பொருள்படும். கொற்றம், அவ்வை என்ற இரு சொற்களும் சேர்ந்து கொற்றவை ஆகியுள்ளது என்று இன்னொரு வகையாகவும் கூறலாம். சூலி என்ற சொல் திரிசூலத்தை உடைய கொற்றவையை உணர்த்துகின்றது. சங்க காலத்தில் குறிஞ்சி நிலத்திலும் முல்லை நிலத்திலும் வாழ்ந்த மக்கள் கொற்றவையை வழிபட்டு வந்துள்ளார்கள்.

முருகனைப் பெற்றெடுத்ததாகக் கொற்றவையின் கருப்பை புகழப்படுகின்றது. பாதி பெண்ணும், பாதி ஆணுமாயுள்ள சிவனின் அர்த்த நாரீஸ்வரர் உருவம் பற்றிய கருத்து சங்க காலத்தில் இருந்திருக்கிறது. இமையா நாட்டமுடைய நெற்றிக் கண்கொண்ட தனது கணவனாகிய சிவனின் இடப்பாகத்தைத் தனக்கு இடமாகக் கொண்டுள்ளாள் கொற்றவை என்று கூறப்படுகிறது.

தை நீராடலில் ஒரு பெண் இன்னொரு பெண்ணின் நெற்றியிலே சிவப்புத் திலகமிடுகிறாள். திலகந் தாங்கிய பெண் கொற்றவைபோல் காட்சியளிக்க வேண்டுமென்று கருதியே அவள் அப்படிச் செய்கிறாள். இந்த நிகழ்ச்சியைக் கூறும் பொழுது கொற்றவையின் நெற்றியில் உள்ள நெருப்புக் கண்ணைப்பற்றிக் குறிப்பிடுகிறார் புலவர். கொற்றவை ஆகிய அம்பாளை வேண்டி ஆடும் புனித நீராடலைக் குறிப்பதாக "அம்மா ஆடல்" எனும் சொற்றொடருக்குப் பொருள் கொள்ளலாம்.

பாவை நோன்பும், புனித நீராடலும், முற்றாகக் கொற்றவைக்கே உரியதாகப் பிற்கால வழக்கத்தில் காணப்படுகிறது.

நாடு செழிக்க மழை நல்க வேண்டுமென்றும், தங்களை விட்டு பிரியாதிருக்கும் நல்ல கணவன்மாரைத் தந்தருள வேண்டுமென்றும் கொற்றவையின் அருள் வேண்டிக் கன்னிப் பெண்கள் நிற்பதை "அம்மா ஆடல்" எடுத்துக் கூறுகிறது.

கொற்றவை பார்வதியாக மாற்றம் பெறுவதைச் சங்க இலக்கியங்களில் காணலாம். திருமுருகாற்றுப் படையில் முருகனை "மலைமகள் மகன்" என்றும் "கொற்றவை சிறுவ" என்றும் வர்ணிக்கப்பட்டிருப்பது இம்மாற்றத்தின் உண்மைநிலையை எடுத்துக் கூறுகிறது. அங்கே பார்வதி அல்லது மலைமகள் கொற்றவையோடு இனங்கண்டு கொள்ளப்படுகிறாள்.



தம்பலகாமம் தந்த தமிழறிஞர்
கலாநிதி. எஸ். சத்தியமூர்த்தி

# இராம நாமம்

இராம நாமம் எவ்வளவு வலிமையுள்ளது என்பதை அடியார்கள் மிகவன்மையாகச் சிந்திக்க வேண்டும் இராம நாமம் தியானிக்க தியானிக்க எங்களை புடம்போட்ட தங்கம்போல் ஒளிவிடச் செய்கின்றது.


சீதாபிராட்டியை கண்டுபிடிக்க வானரச் சேனையை அணுகிய இராமன் அனுமனை இலங்கைக்குப்போய் சீதையை கண்டுவரும்படி கேட்கிறான் அனுமனும் அதற்கிணங்கி "ஓம் ஸ்ரீ ஜெயராம்" என்ற கோஷத்துடன் இலங்கையைக் கடந்து விடுகிறான். ஒரே கணத்தில் – இலங்கையை அடைந்து சீதாபிராட்டியை கண்டுவிடுகிறான்.

இராமபிரானுக்கு நல்ல செய்தியைக் கொண்டுவருகிறான். ஆனால் பின்பு இராமன் இந்தக் கடலைக் கடக்க கல்லைபோட்டு இராமர் அணை என்ற அணையைப் பாலமாகப் போட்டுத்தான் கடலைக் கடக்கின்றார்.

இதனால் நாம் என்ன அறிகின்றோம் என்றால் "ஸ்ரீ ராம நாமம் அடியான் ஒருவனுக்கு உச்சரித்த மாத்திரத்தில் கடலை அவன் கடக்க எத்துணை உதவுகிறது அதேவேளை அந்தக் கடவுளே. அதே வேலையைச் செய்ய எவ்வளவு துன்பங்களை அனுபவித்தார் என்பதையும் சொல்கிறது. இதனால் "ஸ்ரீராம நாமம்" எவ்வளவு வலிமையுடைத்து என்பதை நிதமும் தியானிப் பவர்கள். அறிந்து கொள்க.



அ. இராமலிங்கம்


Israel Ministry of Tourism

# புனித நகரத்து மனிதர்கள் .....

கஃபா தொட்ட
காற்றில்
ஹாஜிகளின்
தக்பீர் ஒலி
கலந்துவரும்.

இறுதிப் பயணத்தின்
இறுமாப்பில் - இவர்களின்
நெஞ்சம்
நிமிரும்.

மக்கமா நகரத்து
மண்ணும்,
பக்கமாய் வந்த
மனுக்களின்
எண்ணும்,
ஒன்றையொன்று
வென்று செல்லும்.

கனவொன்று
கைவந்த - களிப்பில்
கண்கள் - இன்னுமோர்
ஸம் ஸம்
செய்யும்.

புனிதம் தேடிப்
புறப்பட்ட பயணத்தில்
மனிதம் - மறுபடி
உயிர்பெறும் ..... அங்கே
மரணிக்கும்
மனுவோடு
ஆயிரமாயிரம் - கைகள்
ஆவலாய் உயரும்.

அல்லாஹ்வே ....!
குற்றம் கலந்த
குருதியும்
கறைபடிந்த
நெஞ்சுமாய் - உன்
அடிமைகள் - இங்கே
அடைக்கலம் தேடி....
ரட்சகனே ...!

சொந்தமும் - கொண்ட
சொத்தும் - பழகிய
சுற்றமும் - வாழ்ந்த
சூழலும்,
மொத்தமாய் விட்டு ....
ஆத்மாவின்
சுத்தம் மட்டும் நாடி
நாங்கள் ....

நாயகனே ....!

ஒருவனென்ற
வார்த்தைக்குள்
உருவமற்றவனே - மறுமைத்
தீர்ப்பு நாளின் - மகத்தான
தலைவனே... - உன்
வழியில்
வழங்கிட - ஒரு
ஒற்றைச் சொல்தான் - இனி
மீதமிருக்கிறது.
எங்கள்
உயிர்.

"மொஹமட் ஆஷிப்"


## ஜீவாகாரம்

**தாய்ப் பாலூட்டும் குழந்தைகளுக்கு:**

பாலோடு சேர்த்து
ஜீவாகாரம்
பசையாக்கியும் உண்ணக்
கொடுக்கலாம்

**வளரும் குழந்தைகளுக்கு:**

வாழைப்பழத்தோடு
ஜீவாகாரம்
கலந்து உண்டாக்கும்
பசைக்கலவை
மேன்மையானது
அல்லது பால், சீனி கலந்து
பசையாக்கியும் உண்ணக்
கொடுக்கலாம்.

**பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் அனைவருக்கும்:**

தேங்காய்த்துருவல், சீனி
அல்லது சர்க்கரை சுடுநீர்
கலந்து சுவையான
உருண்டைகளாகவோ
அல்லது பசையாகவோ
தத்தம் சுவைக்கேற்ப
உண்ணலாம்.

ஜீவாகாரம்

அண்ணா இன்டநஷனல்
(பிரை) லிமிட்
214/5, மெசஞ்சர் வீதி,
கொழும்பு 12.

AS WHITE AS SNOW!
BEST PHOTO COPY PAPER IN SRI LANKA

# " SNOW WHITE"

# BE.ES.EN.TRADERS

IMPORTERS OF PRINTING PAPERS, PHOTO-COPY PAPERS, PRINTING MACHINES, PRINTING INKS

**AGENTS FOR** { RECKITT & COLMAN OF CEYLON LTD
NESTLE LANKA LTD

276 WOLFENDHAL STREET,
COLOMBO -13

PHONE: 348418/19,
335008, 330297. FAX: 449809



## சோதிடக் கணிப்பீடுகள்

உங்கள் ஜாதகங்களை கணனியில் (Computer) துல்லியமான கிரகஸ் புடங்களுடன் கணித்து இராசி, நவாம்ச, பாவ, சப்தவர்க்க, அஷ்டகவர்க்க, கிரக பலம், திசா, புத்தி, அந்தர விபரத்துடன் பெறலாம்.

வெளிநாட்டில் பிறந்தவர்களின் ஜாதகங்கள் அந்நாட்டு நேரத்தில் கணிக்கப்படுகின்றன.

உங்கள் ஜாதகங்களிற்குரிய விரிவான வருடப்பலனை எம்மிடம் அறிந்து கொள்ளலாம். Computer Floppy Disk ல் பதிவு செய்தும் ஜாதகங்களைப் பெறமுடியும். ஜாதகம் கணிக்க நீங்கள் தர வேண்டிய விபரம், பெயர், பிறந்த திகதி, நேரம், பிறந்த இடம் மட்டுமே

# VIGNES

465/1A Havelock Road, Colombo 6, Sri Lanka
Telephone : 074-513233 Foreign Callers Dial: 00 9474 513233

# தாவடி அம்மன் கோயில்

சீரும் திருவும் பொலியும் யாழ்ப்பாணத்தில் தாவடி எனும் ஊரில் மூர்த்தி தலம் தீர்த்தம் எனும் சிறப்புப் பெற்ற ஆலயமாக தாவடி வடக்குபத்திரகாளி அம்மன் கோயில் அமைந்திருக்கிறது. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற அவ்வைப் பாட்டியின் வாக்குக்ஏற்ப அநாதி காலம் தொட்டு அமைந்துள்ள இவ் ஆலயம் அடியார்க்கு வேண்டிய வேண்டியாங்கு இற்றை வரை திருவருளை வழங்கி அருள் பாலிக்கின்றது. இவ் அம்மன் ஆலயத்தில் உள்ள சிறப்பு என்னவென்றால் இலங்கையில் உள்ள வடக்கு திசை நோக்கி அமைந்திருக்கும் அம்மன் ஆலயம் இதுவே.

இவ் ஏழுலோக நாயகியின் அற்புதம் என்னவெனில் இக்கோயிலில் ஒரு நந்தவனம் காணப்பட்டது. அங்கே ஒரு வாழை மரத்தில் காண்போரை கவரும் வண்ணம் ஒரு பெரிய வாழைக்குலை முற்றிய பருவத்தில் காணப்பட்டது. அதனை அவ்வூரைச் சேர்ந்த ஒருவன் ஆசைப்பட்டு திருட்டுத்தனமாக வெட்டுவதற்கு கத்தியை ஓங்கிய பொழுது ஓங்கிய வண்ணமே கண்பார்வையையும் இழந்து கையை அசைக்கமுடியாது கத்தியை தூக்கிய வண்ணம் சிலைபோல நின்றதாகவும், அதிகாலை அர்ச்சகர் வந்து பார்க்கும் வரை அந்த நிலையிலேயே நின்றதாகவும் அர்ச்சகரே அம்பாளின் திருவருளை எண்ணி ஆச்சரியப்பட்டு உள்ளம் புளகாங்கிதம் அடைந்து அம்பாளைத் தியானித்து விபூதிப் பிரசாதம் தீர்த்தம் கொண்டு .. பூசிய பின்புதான் அவ்விடத்தை விட்டு அவன் விலகியதாக வரலாறு கூறுகின்றது. இது அம்பாளின் சக்தியே.



செல்வி. பா.கிருத்திகா
(10 ,புனித பிரிஜட் கன்னியர் மடம், கொழும்பு)

இவ்வாறு சிறப்புபெற்ற ஆலயத்தின் அமைப்பு ஆகம விதிப்படி மக்களை கவரும் வகையில் அமைந்துள்ளது. மூலஸ்தானத்தில் ஆதிசக்தியாகிய காளியம்மன் கம்பீரமாக வீற்றிருக்கிறாள். அம்பாளின் சந்நிதிக்கு தெற்குப் பக்கமாக அம்மன் நாகதம்பிரானுடன் காட்சியளிக்கிறாள். அந்தகாசுரனை அழிக்க சிவன் விஷ்ணு பிரம்மா முருகன் ஆகியோரிடமிருந்து ஒவ்வொரு சக்தியாக இயம்பிய நவ சக்திகளும் விநாயகர் பைரவர் ஆகிய தெய்வங்களும் காணப்படுகின்றன. இவ் ஆலயத்தின் தல விருட்சமாக ஆலமரமும் வேப்ப மரமும் சேர்ந்து காட்சி அளிப்பது ஆலயத்தின் பழைமையை நினைவு கூர வைக்கின்றது. அம்மனின் சந்நிதியில் காணப்படும் உருவங்களையும் ஸ்தூபிகளையும் காணும் பொழுது எவ்வளவு பழமை வாய்ந்தன என்பதை உணர முடிகின்றது.

எந்நேரமும் மக்களுடைய வேண்டுகோளையே செவி சாய்த்துக் கொண்டிருக்கும் தாய்த் தெய்வமாகிய அம்மன் தன்னை நினைந்து ஓரடி வைத்தால் இரண்டடி முன்னே வைத்து காக்கும் பேரன்புக்கும் கருணைக்கும் ஈடுஇணை உண்டா?

# இந்து மதம்

உலகிலே பல மதங்கள் காணப்படுகின்றன எல்லாமதங்களிலும், சிறந்ததும் நல்லொழுக்கங்களையும், சிறந்த கொள்கையையும் கொண்டிருப்பது இந்து மதம் மிகத் தொன்மையான சமயமும் நமதே. இந்து மதம். சிந்து நதிபள்ளத் தாக்கில் உருவாகியது. இந்து மதத்தில் 6 பிரிவுகள் உண்டு. அவை சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகியனவாகும். சைவத்திற்கு சிவனும், சாக்தத்திற்கு சக்தியும் வைணவத்துக்கு விஷ்ணுவும், காணபத்தியத்துக்கு கணபதியும் கௌமாரத்திற்கு முருகனும் சௌரத்திற்கு சூரியனும் முதல் கடவுளாக விளங்குகின்றனர். மேலும் இந்து சமயத்துக்கு சனாதன தர்மம் என்றும் பெயருண்டு.

இந்து மதத்தில் வேதங்கள், ஆகமங்கள், சிவாகமங்கள், உபநிடதங்கள் போன்ற நூல்கள் முக்கியமானவையாகும். வேதங்களில் இருக்கு வேதம், யசுர் வேதம், சாம வேதம் என நால்வகை காணப்படுகின்றன. வேதங்கள் இறைவனாலே இருடிகளுக்கு அருளப்பட்டது. ஆகமங்கள் 28 ஆகவும் சிவாகமங்கள் 10 ஆகவும் காணப்படுகின்றது. இந்து மதத்தில் பல நாயன்மார்களும், அனுபூதிமான்களும், இருடிகளும் தோன்றியுள்ளனர். இந்து மதத்தின் ஒரு பிரிவே சைவசமயம்.

இனி சைவசமயமே இலங்கையில் அதாவது நமது ஈழநாட்டிலே பெரும்பான்மையாக காணப் படுகின்றது. சைவசமயத்திலே 63 நாயன்மார்கள் உள்ளனர். அவர்களில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் சுந்தரர் என்னும் நால்வரே உலகத்தில் இந்துமதம் தழைத்து வேரூன்ற உதித்து பல அற்புதங்களையும் செய்தார்கள். தேவாரப்பதிகங்களையும் பாடியருளினர்.

ஏழையானாலும் இல்லையென்று கேட்பவனுக்கு கொடுப்பதே இந்து மதத்தின் சிறப்பு. உதாரணமாக கர்ணனை போன்ற வள்ளல்கள் தோன்றியதும் இந்து மதத்திலேயே. மேலும் மிகச் சிறந்த நூல்களான இராமாயணம், மகாபாரதமும் நமது மதத்திலேயே தோன்றின. அறம் வளர்த்த வேந்தர்களும், உண்மையை கடைசிவரையும் கடைப்பிடித்த அரிச்சந்திரனும் நமது மதத்தவர்கள் ஆறுமுகநாவலர், ஞானப்பிரகாசர், விவேகானந்தர், காந்தியடிகள் என்போர் நமது இந்து மதத்தை உலகறிய செய்தனர்.



செல்வன் இ. பிரதீபன்
(10 றோயல் கல்லூரி கொழும்பு)

# திருஞானசம்பந்த சுவாமிகள்

செல்வி. ஆர். சுபாஷினி
ஆண்டு 8ஏ, இந்து மகளிர் கல்லூரி கொழும்பு



ஒரு நாள் சம்பந்தரும் அவருடைய தந்தையும் சீர்காழிக்கோயில் குளக்கரைக்கு நீராடுவதற்கு சென்றிருந்தனர். குளக்கரை படிக்கட்டில் சம்பந்தரை இருத்தி விட்டு தந்தை குளத்தில் நீராடிக் கொண்டிருந்தார் தந்தை குளத்தில் மூழ்கிக் குளித்ததால் திடீர் என தன் தந்தையை காணவில்லை என்று நினைத்து அம்மே! அப்பா! என்று அழுதார். குழந்தை அழும் சத்தம் இறைவனின் காதில் கேட்டது இறைவன் உமாதேவியாருடன் கரைக்கு வந்து குழந்தைக்கு ஞானப்பால் ஊட்டினார். குளத்தில் நீராடி விட்டு கரையேறிய தந்தை குழந்தை வாயில் பால் வடிந்திருப்பதைக் கண்டு, "யார் ! கொடுத்த எச்சில் பாலைக் குடித்தாய்?" என்று அதட்டினார் நிலத்திலே கிடந்த கோல் ஒன்றை எடுத்து அடிக்க கையை ஓங்கினார் ஞானப்பால் உண்ட பிள்ளை பால் வழங்கிய அம்மை அப்பரைச் சுட்டிக் கோயில் கோபுரத்தைக் காட்டி "தோடு உடைய செவியன்" என்ற தேவாரத்தை பாடினார். குழந்தைக்குச் சம்பந்தர் பக்தி பரவசத்தால் இறைவனை பாடும் அருளையும் பெற்றார்.

சந்நிதி வாசகர்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்து

NEW KALYANI
JEWELLERY MART

95, SEA STREET, PETTAH
COLOMBO-11.
TELEPHONE: 422912, 325343

# சமயமும் ஒழுக்கமும்

செல்வி சரண்யா மகேந்திரராஜா
ஆண்டு -12, வின்சன் மகளிர் பாடசாலை,
மட்டக்களப்பு

உலகைப் படைத்தவன் இறைவன். அந்த உலகில் சமயங்களைப் படைத்தவன் மனிதன். நோயிருக்கும் இடத்தில் வைத்தியசாலை தேவைப்படுவது போல ஒழுக்கச் சீர்கேடுகள் பெருகி தர்மம் அழிந்து அதர்மம் பெருகுமிடத்தே சமயங்களின் தேவை உணரப்படுகின்றது.

சமயம் என்றால் என்னவென்று சிந்தித்து பார்த்தால் வாழ்க்கையைச் செம்மையாக வாழ எமக்கு உதவும் நெறி என்பது புரியும். சமய வாழ்க்கை வாழாமல் தான்றோன்றித் தனமாக எமது சுயநலத்திற்காக வாழும் போது அங்கே சமயம் புறக்கணிக்கப்படுகின்றது.

இன்று நாம் கடைப்பிடிக்கும் சமயநெறி சரியானதுதானா என்று சற்றே ஆராய்ந்து பார்த்தால் இல்லை என்றே கூறவேண்டும்.

எமது வழிபாடு, கிரிகைகள் எல்லாமே இறைவனோடு வியாபாரம் பேசுவது போல அமைந்து விட்டன. ஆண்டவனை நாம் திருப்திப்படுத்தினால் அவர் நம் வேண்டுகோளைக் கவனிப்பார் என்று நம்புகிறோம். கடவுளை உணர்தல் என்பது உள்ளத்தைக் கடத்தல் எனப்பொருள்படும். தூய்மையான அறிவுதான் தெய்வீகம். தூய அறிவு பெற எமது வாழ்க்கையில் ஒழுக்க நெறி இன்றியமையாததாகிறது.

உண்மையை, தர்மநெறியை, ஒழுக்கத்தை பின்பற்றாத வாழ்வு பொய்யான வாழ்வாகும். இன்று நாம் இத்தகைய வாழ்வுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நன்னெறி எது தீயநெறி எது என அறியும் ஆற்றல் பகுத்தறிவு எனப்படும். விலங்கு நிலையிலிருந்து மனிதனை தெய்வீக நிலைக்கு உணர்த்துவது பகுத்தறிவுதான். பகுத்தறிவு நல்வழி

*மாணவர்களாகிய எமக்கு சில கடமைகள் உள்ளன. கற்றல், பெரியோரை கனம் பண்ணல் உண்மை பேசுதல், நன்றி மறவாமை என்பன அவற்றில் அடங்கும்.*

*தன் கடமையை சரிவரச் செய்யாமல் எவ்வளவுதான் தெய்வத்தை வேண்டி அழுதாலும் பயனில்லை, நாம் செய்யும் செயலுக்கு ஏற்ற பலனே எமக்கு கிடைக்கும்.*

காட்டும் ஒளிவிளக்காக அமைய நாம் சில பயிற்சிகளை மேற்கொள்வது அவசியம்.

மாணவர்களாகிய எமக்கு சில கடமைகள் உள்ளன. கற்றல் பெரியோரைக் கனம் பண்ணல், உண்மை பேசுதல், நன்றி மறவாமை என்பன அவற்றில் சிலவாகும்.

தன் கடமையை சரிவரச் செய்யாமல் எவ்வளவுதான் தெய்வத்தை வேண்டி அழுதாலும் பயனில்லை. நாம் செய்யும் செயலுக்கு ஏற்ற பலனே எமக்கு கிடைக்கும்.

உள்ளத்தால் சரியானதை நினைப்பது உண்மை எனவும், வாயினால் சரியானதை பேசுவதை வாய்மை எனவும், உடம்பினால் சரியானதை செயற் படுத்துவது மெய்மை எனவும் அழைக்கப்படும்.

நாம் இன்று உள்ளத்தால் ஒன்று நினைத்து வாயினால் வேறொன்று பேசுகிறோம். வாயினால் சொல்வது வேறு செய்வது வேறாக இருக்கிறது.

இராமகிருஷ்ண பரமஹம்சர் "இந்த யுகத்தில் உண்மை சொல்லலும் உண்மை வழி நிற்றலுமே சிறந்த தவமாகும்" என்று கூறினார். அன்பு வற்றிப் போவதால் உலகில் இன்பம் இல்லாமல் போகிறது.

அன்பும் சிவமும் ஒன்றேதான் என்கிறார் திருமூலர். அன்பு எம்மைச் சார்ந்தோரிடம் மட்டும் செலுத்துவது முறையன்று. எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொள்ளப் பழக வேண்டும்.

வேற்று மதத்தினரையும் அன்புடன் நடத்துவது உயர்ந்த பண்பாகும் என்பது பகவான் சாயிபாபாவின் அருள் வாக்கு.

*"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்*
*அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு"*

உண்மையான அன்புள்ள ஒருவன் எந்த வேளையும் எவர்க்கும் உதவக் காத்திருப்பான்.

இவ்வாறு உயர்ந்த நெறிகளை கடைப்பிடித்து வந்தால் அதுவே சமயங்கள் காட்டும் நன்நெறியாகும்.

# இறைவன் இருக்கின்றானா?

(உண்மைச் சம்பவம்)

செல்வன் ஆ. அஜந்தன்
8D கொழும்பு இந்துக் கல்லூரி



நான் சிறுகுழந்தையாக இருக்கும் போது எமது தந்தையார் மேற்கிந்திய தீவுகளிலுள்ள ஜமேக்காவிற்கு அங்குள்ள பல்கலைக்கழக மருத்துவ மனையில் வேலை பெற்றுச் சென்றார். அங்கு போனதும் எம்மவர் ஒருவரும் அங்கு இல்லாததால் மிகவும் வெறுப்படைந்து ஏன் இங்கே வந்தோம் என்று எனது தாயுத் தந்தையும் அங்கலாய்த்தனர். இனி என்ன செய்வது ஏதோ வந்துவிட்டோம் ஒரு வருடமாவது இங்கிருக்க வேண்டும் இறைவன் தான் துணை என எண்ணினர்.

அவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட வீட்டின் திறப்பை ஆஸ்பத்திரியில் பெற்றுக் கொண்டு வீட்டிற்கு போனார்கள்.

வீட்டின் முன் கதவை திறந்து பார்த்த போது அவர்களுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. முன் வரவேற்பறையின் நிலத்தில் இலங்கை காசுகள் சிதறிக் கிடந்தன. அவர்கள் மிகவும் ஆச்சரியத்துடன் அக்காசுகளை பொறுக்கி எடுத்தார்கள். அயலில் உள்ளவர்களிடம் இலங்கையை சேர்ந்த யாராவது அங்கு வசித்தார்களா என்று கேட்டபோது இல்லை என்றே பதில் கிடைத்தது. எனவே அவர்கள் இறைவன் தான் அக்காசுகளின் மூலம் தான் துணைக்கு இருக்கின்றேன் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் என்று கூறியுள்ளான் என அனுமானித்து சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர்.

# சோமவார விரதம்

செல்வன் நடராஜா பிரசன்னா
(7A றோயல் கல்லூரி கொழும்பு)



இது ஒவ்வொரு திங்கட்கிழமை தோறும் அனுட்டிக்கப்பட வேண்டியதாம். எனினும் கார்த்திகை மாதத்தே வரும் எல்லாத் திங்கட்கிழமைகளிலும் இவ்விரதத்தைச் சிறப்பதாக அனுட்டிப்பார். கார்த்திகையில் அனுட்டிப்போர் முதல் திங்கட் கிழமையின் போது காப்பு நாண் அணிதல் சங்கற்பம் செய்தல் முதலியவற்றில் ஈடுபடுவர்.

ஒவ்வொரு திங்கள் காலை தோறும் உரிய முறைப்படி கோயிலுக்குச் செல்வர். அங்கு நடைபெறும் விசேட அபிடேக ஆராதனைகளில் கலந்து கொள்வர். திங்கட் கிழமைக்குச் சோமவாரம்.

சோமன், சந்திரன் என்று அழைக்கப்படுகிறான். அவன் வழி பாட்டு மகத்துவத்தாலே சிவ பிரானாரின் சிரசில் அமர்ந்து கொண்டான். விரதம் அனுட்டிப்போர் அன்று பகல் முழுவதும் உணவு உண்ணாமல் விரதம் இருப்பர். சிவபிரானை நினைந்தே பொழுதைப் போக்குவார். வானத்தில் வெள்ளி உதயமானபின் மாலையில் தீபமேற்றி உணவுண்பர். மாலையில் திருவிழா நடைபெறும். சுவாமி திருக்கோயில் வலம் வருவர்.

இவ் விரதத்தின் பெருமையை யாஜ்ஞ வல்கியர் என்னும் முனிபுங்கவர் தமது பத்தினி மயித்தி ரேயிக்கு உபதேசித்தருளினார்.

இவ்விரதம் தன்னை அனுட்டித்தாரை ஆபத்தில் பாது காக்கும். அன்றியும் பிதிர்களை யெல்லாம் நரகத் துன்பத்தில் நின்று நீக்கி ஆளும் என்று கூறுவர். சோமவார விரதத்தினைத் தொடர்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் அனுட்டித்துப் பின் நிறுத்தலாம் என்பர். இந்நாளில் ஏழாண்டு காலம் அனுட்டித்தும் நிறுத்துகின்றனர்.



# மலர்த்தட்டு

மாஸ்டர் சிவலிங்கம்

நரேந்திரன் – சுவாமி விவேகானந்தர் 1881 ஆண்டின் ஆரம்ப காலத்திலே கையில் கமண்டலமும் கைத்தடியும் தாங்கிய வண்ணம் சந்நியாசியாக யாத்திரை புறப்பட்டார்.

பணத்தைக் கையாளுவதில்லையென்றும் வலியக் கிடைக்கும் உணவையே உண்பது என்றும் உறுதி பூண்டபடி கால் நடையாகத் தனது யாத்திரையை ஆரம்பித்தார்.

பல நாட்களின் பின்பு ராஜபுதன சமஸ்தானங்களுள் ஒன்றான ஆள்வார் இராட்சியத்தை நரேந்திரர் அடைந்தார். நரேந்திரரின் அற்புத உரை அனைவரையும் கவர்ந்தது.

ஆள்வார் சமஸ்தானத்தின் திவானாக விளங்கிய சேனாதிபதி இராமச்சந்தர்ஜி நரேந்திரனின் சிறப்பைக் கேள்வியுற்று தமது வீட்டுக்கு அவரை அழைத்து உபசரித்தார்.

''அறிவாற்றலிலே சிறந்து விளங்கும் அற்புத புருஷர் ஒருவர் எனது வீட்டுக்கு எழுந்தருளியுள்ளார்'' என்று ஆள்வார் மகராஜாவிடம் திவான் கூறினார்.

மகிழ்ச்சி அடைந்த மன்னர் பிரதானிகள் புடைசூழ, திவானின் இல்லத்துக்கு வந்தார். நரேந்திரரின் கம்பீரமான தோற்றத்தைக் கண்டதும் அரசர் பணிவுடன் வணங்கினார். நரேந்திரரும் ஆள்வார் மன்னரும் உரையாடத் தொடங்கினர்.

''சுவாமி ! விக்கிரகங்களை வணங்குவதில் எனக்கு விருப்பமில்லை. கல்லையும் செம்பையும் கடவுள் என்று வணங்குவதா?'' என்று ஏளனத்துடன் கேட்டார் மன்னர். மன்னரின் கேள்வியைக் கேட்டதும் நரேந்திரர் புன்முறுவல் பூத்தார்.

சுவரிலே மாட்டப்பட்டிருந்த அரசரின் படத்தை எடுத்துவரும்படி திவானிடம் கூறினார் நரேந்திரர். திவான் பயபக்தியோடு அந்தப் படத்தை எடுத்து வந்தார்.

''தயவு செய்து இந்தப் படத்தில் துப்புங்கள்...'' என்று திவானிடம் கூறினார் நரேந்திரர். இதைக் கேட்டதும் திவான் நடுநடுங்கிவிட்டார்.


''சுவாமி ! என்ன இப்படிச் சொல்லி விட்டீர்கள். இது எங்கள் மதிப்புக்குரிய அரசர் பெருமானின் உருவ மல்லவா?'' என்று நடுங்கும் குரலிலே தட்டுத்தடுமாறியபடி கூறினார் திவான்.

''இது உங்கள் அரசரா? இது வெறும் கண்ணாடியும் காகிதமும் மரச்சட்டமுந்தானே...? இப் புகைப்படம் உங்கள் மகாராஜா அல்ல, அவர் போன்ற பிரதிபிம்பமே இது. இப்படத்தின் மூலம் அரசருக்கு நீங்கள் மரியாதை காட்டுகிறீர்கள்.

''அது போன்றே கற் சிலையையும் செம்பு, வெண்கலச் சிலைகளையும் கடவுளின் பிரதி பிம்மமாகக் கருதி இந்துக்கள் மரியாதை செலுத்துகின்றனர். கல்லே, செம்பே என்று யாரும் பிரார்த்திப்பதில்லை. விக்கிரகங்கள் மூலம், எங்கும் நிறைந்திருக்கும் இறைவனையே நினைந்து பக்தர்கள் வணங்கு கின்றனர்... இறைவனை ஞாபக மூட்டுவதற்கே விக்கிரகங்கள் உதவுகின்றன...'' என்று விளக்கினார் நரேந்திரர் – சுவாமி விவேகானந்தர்.

''சுவாமிஜீ ! இவ்விடயத்தில் நான் இதுவரை அறிவிலியாகவே இருந்துவிட்டேன். இது போன்ற அரிய விளக்கம் இதுவரை எனக்கு யாரும் தரவில்லை. இப்போது அறியாமை இருள் அகன்று, சந்தேகம் தெளிந்து விட்டது'' என்று கைகூப்பிப் பணிந்து நரேந்திரரை வணங்கினார் ஆள்வார் மகாராஜா.

# விசிறியின் கதை



## அறிவுலக அறிமுகம்

கலாநிதி சபா.ஜெயராஜா

சூரியன் தகதக என்றிருந்தது. நிலம் சுட்டது. வியர்வை கொட்டியது. ஆசிரியர் பஞ்சலிங்கம் வந்தார். அவரிடம் ஒரு பனை ஓலை விசிறி இருந்தது, மெதுவாக விசிறினார். காற்றுக் குளிர்ந்து இதமாக இருந்தது. 'என்ன கதை இன்றைக்குச் சொல்வது' என்று ஆசிரியர் கேட்டார். 'விசிறியின் கதை' என்றான் விமலன். கதை தொடங்கியது.

'விசிறியின் கதை பழையது. பழந் தமிழ் நாட்டிற் பலவகை விசிறிகளைப் பயன்படுத்தினர். ஓலை, மூங்கிற் சிம்புகள், சந்தனக்கட்டை, பட்டுத்துணி, வெட்டி வேர், மயில் இறகு, தோல் என்பவற்றால் விசிறிகளைச் செய்தார்கள். நோய்களைக் குணப்படுத் துவதற்கும் விசிறிகள் பயன் பட்டன. மூலிகைச் செடிகளாற் செய்த விசிறிகள் பழந்தமிழ் நாட்டிலே பயன்பட்டன.

கவரிமான் மயிரினால் செய்யப்பட்ட விசிறி 'வெண்சாமரை' எனப்படும். அரச மண்டபங்களில் வெண் சாமரை வீசப் பெற்றது. சேரல் இரும்பொறை என்ற அரசன் இருந்தான். அந்த அரசனைத்தேடி மோசிகீரனார் என்ற புலவர் சென்றார். புலவர் மிகவும் களைத்திருந்தார். பசியால் மிகவும் இளைத்திருந்தார். புலவருக்கு நித்திரை வந்தது. போர் முரசுகள் வைக்கும் ஒரு கட்டிலைக் கண்டார். அதன்மீது ஏறிப் படுத்துக் கொண்டார்.

மன்னன் வந்தான், புலவரைக் கண்டான். புலவர் இதமாக நித்திரை செய்ய வேண்டும் என்று விரும்பினான். வெண்சாமரை வீசினான். இவ்வாறாய்ப் புலவர்களை அரசர் போற்றியே நாடே பழந் தமிழ்நாடு.

உலகின் பல்வேறு நாடுகளிலும் விசிறிகள் பயன் பட்டன. அழகுக்காக விசிறிகளை வைத்திருக்கும் மரபு ஜப்பானில் உண்டு. உரோமபுரியில் மணப் பெண்ணுக்கு விசிறி கொடுப் பார்கள்.

1882ஆம் ஆண்டில் மின்சாரத்தால் இயங்கும் விசிறி கண்டுபிடிக்கப்பட்டது. சுயிலர் எஸ். வீலர் என்பவர் அதனைக் கண்டுபிடித்தார். மின் மோட்டரில் ஒரு தண்டைப் பொருத்தினார். அந்தத்தண்டு 'செலுத்தித்தண்டு' எனப்பட்டது. அதில் அலகுகளைப் பொருத்தினார். மின்மோட்டர் இயங்க, அலகுகள் சுழன்று காற்று வந்தன.

இன்று பல்வேறு விசிறிகள் உபயோகத்தில் உள்ளன. கூரை விசிறி, மேசை விசிறி, தூண்விசிறி என்றவாறு பல்வேறு விசிறி வகைகள் உண்டு. இவையெல்லாம் மின் வலுவால் இயங்கும் விசிறிகள்.

'பங்கா' எனப்படும் இன்னொரு வகை விசிறியும் உண்டு. பங்கா கைகளால் இயக்கப்படும் நீண்ட பலகையின் நுனியிலே துணியைப் பொருத்தியிருப்பார்கள் அசையக் கூடியவாறு கூரையின் உட்புறத்திலே பங்கா பொருத்தப் பட்டிருக்கும். ஒரு கயிற்றினால் அதனை அசைக்க இதமான காற்று வரும்.

விசிறிகள் இன்னும் பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுகின்றன சுரங்கங்களில் நச்சு வாயு நிறைந் திருக்கும். அவற்றை வெளியேற்ற வேண்டும். நச்சு வாயுவை வெளியேற்றினால் தான் தொழிலாளர் நன்கு சுவாசித்து வேலை செய்ய முடியும். அதன் பொருட்டு விசிறிகள் பயன்படுகின்றன. சுரங்கத்திலுள்ள நச்சு வாயுவை விசிறிகள் வெளியேற்றி விடும்.

வெளியேற்றுவதற்கு மட்டுமல்ல உட்செலுத்துவதற்கும் விசிறிகள் பயன்படுகின்றன. வெளியில் உள்ள நல்ல காற்றை அறைகளின் உள்ளே செலுத்துவதற்கும் விசிறிகள் பயன்படுகின்றன.

மோட்டார் இயந்திரங்கள் வேகமாக வேலை செய்யும். அதனால் அவை சூடேறுகின்றன. அவ்வாறு ஏற்படும் சூட்டைத் தணிப்பதற்கு விசிறிகள் பயன் படுகின்றன.

இவை மட்டுமா? விசிறிகள் வேறு பல தேவைகளுக்கும் உபயோகிக்கப்படும். எரிபொருட் சிக்கனத்தை விசிறிகளால் ஏற்படுத் தலாம். எரிபொருளுக்கு உலகம் முழுவதும் தட்டுப்பாடு நிலவுகின்றது எரிபொருளைச் சிக்கனமாகப் பயன் படுத்துதல் வேண்டும். வெப்பத்தை அவப் போக விடாது உரிய இடத்துக்கு செலுத்த வேண்டும். இதற்கு விசிறிகள் துணை செய்யும்.

நெல் தூற்றுவதற்கும் உமி புடைப்பதற்கும் விசிறிகள் பயன்படும் – என்றவாறு ஆசிரியர் கதை சொல்லிக் கொண்டிருந்தார். குடிப்பதற்கு மாமா இளநீர் கொண்டுவந்தார். கதையும், இளநீரும் இதமாக இருந்தன. தென்னையில் ஓர் அணில் ஏறிக் கொண்டிருந்தது.

திருகோணமலை பத்திரகாளி அம்பாளும் திருக்கோயில் முகப்பும்





*Edited by* : V.Varathasuntharam
*Published by* : Sivagami Ammal Publications
39, 36 th Lane Wellawatte,
Sri Lanka
*Printed by* : Unie Arts (Pvt) Ltd
No48B, Bloemendhal Road,
Colombo-13. Tel: 330195

Rs. ரூபா.
30/=